Registered as a News Letter

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவராண்டு2030 கார்த்திகை24வெள்ளிக்கிழமை(10-12-1999)UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:12

## பொலிஸ் காவலரண் மீது மூதூர் பகுதியில் தாக்குதல்

### சப். இன்ஸ்பெக்டர் உட்பட மூவர் உயிரிழப்பு

திருகோணமலை, டிசெ 10

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் பிரதேசத்தில் தோப்பூர் கிராமத்தின் நுழை வாயிலில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் மீது நேற்றுக் காலை 9 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் இரு பொலிஸ் கான்ஸ்டபிளும் உயிரிழந்தனர் எனப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிக் குடியிருப்புப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியான தோப்பூர் கிராமத்தின் நுழைவாயிலில் அமைந்திருந்த காவலரணே தாக்கப்பட்டது.

அந்தக் காவலரணுக்கு அருகில் தேநீர்க்கடை நடத்தும் 57 வயது முதியவர் ஒருவர் தாக்குதலில் சிக்கிப் படுகாயமடைந்தார்.

அந்த வழியால் சென்ற

(11 ஆம் பக்கம் பார்க்க)

### திருநெல்வேலி, கோண்டாவில் பகுதியில்

## பச்சை நிறக் கொடிகள் இரவோடிரவாக அறுப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 10

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக் கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதிகளில் கட்டப்பட்டிருந்த பச்சை நிற அலங்காரக் கொடிகள் நேற்றிரவு 8-30 மணியளவில் அறுக்கப்பட்டன என்று கூறப்படுகிறது.

வெள்ளை நிறவானில் வந்த சிலர் இந்தக் கொடிகளை அறுத்ததாக கூறப்படுகிறது.

இந்தச்சம்பவம் தொடர்பாக தேர்தல் வன்செயல் பிரிவுக்கு முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்பட்டது. (இ-3)

# ராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் இல்லை!

## பாதுகாப்புக் கருதி நடவடிக்கை

கொழும்பு, டிசெம்பர் 10

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படமாட்டாது என்று தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான வாக்களிப்பை பளையிலும்—

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வாக்களிப்பை மணலாறுப் பகுதியிலும்—

மன்னார் மாவட்டத்துக்கான வாக்களிப்பை மன்னார். நகரிலும் — மட்டுமே நடந்ததேர்தல் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

மேற்படி மாவட்டங்களில் தேர்தலை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை எனக் கூறப்படுவதை அடுத்தேபாதுகாப்புக்கருதிஇந்தமுடிவுஎடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (இ -3)

## தேடித்தர முடியாது என மேலும் 17 பேரின் விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 10

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனவர்களில் மேலும் 17 பேரைத் தேடித் தரமுடியாது எனத் தெரிவித்து பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா அவர்களது உறவினர்களுக்கு நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ள இந்தக் கடிதங்களை பிரஸ்தாப நபர்களின் உறவினர்கள் இன்று பெற்றுக் கொள்ளலாம் என்று கைதாகிக் காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கம் கேட்டுள்ளது.

அதேநேரம் — சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களை இன்று நண்பகல் ஒரு மணிக்கு அரசசார்பற்ற இணைய அலுவலகத்துக்கு வருமாறு பாதுகாவலர் சங்கம் கேட்டுள்ளது. (இ-3)

### தேர்தலுக்கு முன்

## பாதாள உலக குழுக்களை கைதுசெய்ய நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 10

எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னேற்பாடாகக் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்கும் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்தவர்களைக் கைது செய்யப் பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையில் விசேட பொலீஸார் நான்கு பிரிவுகளாகச் செயற்படவுள்ளனர் என்றும் —

கொழும்பு, கொழும்பு வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளிலேயே இந்த வேட்டை நடத்தப்படவிருக்கின்றது என்றும் — குற்றப் புலனாய்வு பகிரேஷ்ட அதிகாரி பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்

தேர்தலைக் குழப்ப இவர்கள் தாக்குதலை நடத்தலாம் எனத் தகவல் கிடைத்துள்ளது என்றும் அவர் சொன்னார். (இ-3-சி)

## 2 ஆம் தொகுதி வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

குருநகர், டிசெ. 10

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி.சீ.ஈ (சாதாரண) தரப் பரீட்சைக்குரிய இரண்டாம் தொகுதி வினாத்தாள்கள் நேற்று விமானமூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

அதே சமயம் எதிர் வரும் 14 ஆம் திகதி இங்கிருந்து ஒரு தொகுதி விடைத்தாள்களைக் கொழும்புக்கு எடுத்துச்செல்ல ஏற்பாடாகியுள்ளது. (இ-3-51)

## ஜி.சீ.ஈ.பரீட்சையில்மோசடி

மட்டக்களப்பு, டிசெ. 10

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி.சீ.ஈ.(சாதாரண தர பரீட்சை வினாத்தாள்களில் மோசடி செய்த சம்பவம் ஒன்று கல்முனையில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பாண்டிருப்பு இந்து மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்திலேயே இந்த மோசடி இடம் பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆங்கில பாடப் பரீட்சையின் போதும் —

நேற்று இடம்பெற்ற கணித பாடப் பரீட்சையின் போதும்— பரீட்சை மண்டபத்துக்குள் நுழைந்த சிலரே இந்த மோசடியில் இறங்கியதாகக் கூறப்பட்டது.

அங்கிருந்து வினாத்தாள்களை எடுத்துச் சென்ற அவர்கள் கேள்விகளுக்கான சரியான விடைகளை எழுதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். முகாமில் பெருமாளுடன் வாக்குவாதம்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, டிசெ. 10

வவுனியாவில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் முகாமுக்கு நேற்று முன் தினம் வந்த வடக்கு-கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சரும் அந்தக் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள வருமான அ. வரதராஜப் பெருமாளுக்கும் அங்கிருந்த கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைபுக்குள் ஏற்பட்டுள்ள பிளவு நிலையில் அங்கு சென்ற வரதராஜப்பெருமாள் அங்குள்ளவர்களைத் தம் பக்கம் இழுக்கும் வகையில் முயற்சித்தார் எனவும்—

ஆனால் அங்கிருந்த உறுப்பினர்கள் அவரின் கோரிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை கண்காணிக்க இலங்கை வருவர்

கொழும்பு, டிசெ. 10

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணிக்காக 25பேர் எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கை வருகின்றனர்.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், கனடா, ஆஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இருந்தே இவர்கள் வருவதாக தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3)

## தமிழ்க் கைதிகள் மீதான விசாரணை துரிதப்படுத்தப்படும்

### நேற்றைய மாநாட்டில் முடிவு

கொழும்பு, டிசெ. 10

தெற்கில் உள்ள சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்டுள்ள ஐந்நூறுக்கு மேற்பட்ட தமிழ்க் கைதிகள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்துவதென நேற்று நடந்த உயர்மட்ட மாநாடு ஒன்றில் முடிவு செய்யப்பட்டது.

சகல கைதிகளையும் விசாரணை செய்து குற்றமற்றவர்களை விடுதலை செய்யவும், குற்றமிழைத்தவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிடுவதெனவும் — அந்த மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களில் தமிழர்கள் கைது செய்யப்படுவது குறித்தும் —

சிறைச் சாலைகளில் உள்ள தமிழ்க் கைதிகள் குறித்தும்— ஆராய விசேட மாநாடு ஒன்று ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில்

12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation

நாளை

கணக்கீடு

திரு. மாலவாசன்

A/L 2000

**கிரயக் கணக்கீடு**

பிரிவு I 6.15 — 7.00 }
பிரிவு II 10.00 — 11.00 } Sat, Sun.

**விக்னா கல்வி நிறுவனம்**

(71676) 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.



**ராஜா**

யாழ்ப்பாணம்

இன்று முதல்

அஜய் - சாலினி

மற்றும் பலர் நடித்த

**காதலுக்கு மரியாதை**

10-30, 2-30

(சி/10118)


## கலந்துரையாடல்

பட்டதாரி ஆசிரியர் சேவையில் உள்வாங்கப்படாத தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர் செவைக்கு உள்வாங்குதல் தோடர்பான பதிவுகளும் கலந்துரையாடலும் எதிர் வரும் ஞாயிறு காலை 8.30 மணிக்கு இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று பட்டதாரி ஆசிரியர் வாண்மைவிருத்தி அமைப்பு அறிவித்துள்ளது. (ஜ-6)


**நாகம்ஸ்**

சுன்னாகம்

ரஜனி, ரோஜா

நடித்த

**உழைப்பாளி**

காட்சிகள்:

11-00, 2-30

(புதிய நேரம்)

(71675)



**லியேட்டி** அச்சுவேலி

இன்று மட்டும்

ஐஸ்வர்யாராய் - ஜனனி

நடித்த

**தாஜ்மகால்**

(புதிய வெளியீடு)

காட்சிகள்: 10-30, 2 30

T.P.No.070-212223

070-212678

(71687)



## பயிற்சி நெறி

யாழ்ப்பாணம் டிசெ 10

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யுனிசெவ் மற்றும் பட்டினிக்கெதிரான நிறுவனம் இணைந்து நடத்தும் வீட்டுத்தோட்டத் திட்டப் பயனாளிகளுக்கான மூன்றாம் கட்டப் பயிற்சிநெறி இன்று ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பயிற்சிநெறி இன்று குருநகரிலும், 14 ஆம் திகதி கந்தர்மடம், அரியாலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும், 16 ஆம் திகதி வண்ணார் பண்ணை, கொழும்புத்துறை, நல்லூர் ஆகிய இடங்களிலும் 17 ஆம் திகதி குருநகர், நாவாந்துறை கந்தர்மடம் ஆகிய இடங்களிலும் 23 ஆம் திகதி வண்ணார் பண்ணையிலும் நடைபெறவுள்ளதாக பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



## குணசிங்கம் ஞானேந்திரன்

(கண்ணன் — குட்டி)

உரிமையாளர் கோபிகா ஆடையகம்

அன்னை மடியில் 07-01-1977 | ஆண்டவன் அடியில் 10-09-1999

அன்பின் திருவுருவே!
பாசத்தின் பிறப்பிடமே!
பெருமைக்கு உரியவனே!
எல்லோரும் போற்றும் உத்தமனே!
பேரானந்தத்துக்கு உரியவனே
எங்கே உன் காட்சியைக்கான
துயராய்த் துடிக்கின்றோம்
என்றும் எங்கள் உள்ளத்தில்
உறைந்து கொள்ளும் கண்ணனே!
என்றும் எங்கள் மனதிலே நித்தம்
உறைகின்றாய்.

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாசத்துடன் உம்மை என்றும் நினைவு கூருகின்றோம்.

குடும்பத்தினர்

கோபிகா ஆடையகம்,
யாழ்ப்பாணம். (71684)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் பூவிலிங்கம்

ஆரியகுளத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் பூவிலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு மாணிக்கம், நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும் றோசம்மாவின் அன்புக் கணவரும், யோச் காலஞ்சென்ற விஜய பாஸ்கரன், தர்மசீலன், (அம்மினி) திருமதி விஜயகுமாரி, குபேரன் (சவுதி அரேபியா), அசோக் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தகப்பனும், கனகரத்தினம் J P. (ஓய்வுபெற்ற அதிபர்), செல்வராசா, திருமதி மகாலட்சுமி, திருமதி நவமணி, கனகசுந்தரம் (A C.D), குமரேசன் (பொறின் ஸ்ரூடியோ), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), பாலச்சந்திரன், சண்முகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாமி (K. S அம்பாள் மினிபஸ் உரிமையாளர்), காலஞ்சென்ற தாமோதரன் (தரன் ஸ்ரூடியோ), காலஞ்சென்ற மரியம்மா, சின்னமணி, ரூபி, சின்னக்கிளி, யேசுதாஸ். அன்ரன், சேவியர் (இத்தாலி), இராசு ஆகியோரின் மைத்துனரும், திருமதி வசந்தி, திருமதி விஜயலட்சுமி, சேகர், திருமதி தர்சினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை [10-12-99] பகல் 11 00 மணியளவில் தகனக்கிரியைக்காக வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்மினி

இல. 1 யாழ். வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம் (71680)

உ
சிவமயம்

# திருமண சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் கார்த்திகைத் திங்கள் 27 ஆம் நாள் (13-12-99) திங்கட்கிழமை பகல் 10.48 மணி முதல் 1.00 மணி வரையுள்ள ஷஷ்டித் திதியில் திருவோண நட்சத்திரமும், கும்ப லக்கினமும் கூடிய அமிர்தசித்தயோக வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **பரணீதரன்** | **விஜிதா** |
| [M Sc. Computer Enge] | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருவருள் துணையுடன் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

14—12—1999 மாலை 3.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

Mr. Mrs. M. A Hari
HARY 'S INSTITUTE
Kondavil East,
Kondavil.

திரு. திருமதி வே. நடராசா
''குறைகிரி''
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

(இரு வீட்டார் அழைப்பு) [71679]

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## 2000 ஆம் ஆண்டிற்கான
# மீள் கேள்வி அறிவித்தல்

1999 - 11 - 14 ஆம் திகதிய உதயன்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தை, இறைச்சிக்கடைகள், கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 2000 - 01 - 01 ஆம் திகதி தொடக்கம் 2000-12-31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மீளவும் கோரப்படுகின்றன.

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| சுன்னாகம் உப - அலுவலகம் | | | | |
| 1. சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 200/- | 2000/- | 300000/- |
| 2. கருவாட்டுக்கடை இல. 7 | 60/- | 50/- | 100/- | 3300/- |
| உடுவில் உப - அலுவலகம் | | | | |
| 1. மருதனார்மடம் சந்தை | | 500/- | 5000/- | 1500000/- |
| 2. இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1500/- | 80000/- |
| 3. தாவடி ஆட்டிறைச்சிக் கடை | —— | 150/- | 1500/- | 30000/- |
| ஏழாலை உப – அலுவலகம் | | | | |
| 1. மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | —— | 150/- | 1500/- | 40000/- |

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித்திகதி — 1999 - 12 - 16 பி.ப.3.00 மணி
கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
இறுதித்திகதி — 1999 - 12 - 17 பி. ப. 2 00 மணி
கேள்விகள் திறக்கப்படும் திகதி — 1999 - 12 - 17 பி. ப. 3.00 மணி

ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான தொகை கோரப்படின் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

குறிப்பு:— சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்குவரும் பொருள்களின் பெறுமதியில் 3%ற்கு மேல் வரி அறவிடக்கூடாது.

தி. மா. செல்வராசா,
ஜே. பி. யு. எம்,
தலைவர்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
1999 - 12 - 09. (சி/10166)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் சேவையாற்ற ஆசிரியருக்கு சந்தர்ப்பம்

வலிகாமம் தெற்கு, டிசெ. 10

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் வேலை செய்ய விருப்பமுடைய ஆசிரியர்கள் உடனடியாக வலிகாமம் கல்வி வலய அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார்.

அண்மையில், கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்த முயன்ற ஆசிரிய சேவையின் பதவி உயர்வுக்கு கஷ்டப்பிரதேசங்களில் குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றியிருக்க வேண்டும் என நிபந்தனை விதித்திருந்தது.

எதிர்காலத்தில் இது போன்ற தேவைகள் ஏற்படும் போது ஆசிரியர்கள் பயனடையக் கூடிய வகையில் கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்ற விரும்பி முன் வரும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கி ஊக்குவிக்க கல்விப் பணிப்பாளர் முன் வந்துள்ளார்.

தீவகப் பிரதேசங்கள், வலிகாமத்தில் குட்டியபுலம் பகுதி, மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதியில் மருதங்கேணிப் பிரதேசம் போன்றவை கஷ்டப் பிரதேச பாடசாலைகள் அடங்கும் இடங்களில் சிலவாகும்

கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்களுக்கு அடுத்த வருடத்தில் இடமாற்றம் வழங்க ஒழுங்குகள் செய்யபபடும் எனத் தெரியவருகின்றது

(ஐ-152)

## பிரதேச செயலகங்களில் காணி பயன்பாட்டுக்குழு

வேலணை, டிசெ.10

காணிநீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சின் தீர்மானத்திற்கமைய ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் தோறும் பிரதேச காணி பயன்பாட்டு திட்டமிடல்குழு அமைக்கப்படவுள்ளது

இதனடிப்படையில் தீவுப் பகுதி தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் இக்குழு அமைப்பதற்கான ஆரமபக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென உதவி அரசாங்க அதிபர் செ. இரத்தினம் தெரிவித்துள்ளார்.

(ஐ-167)

## கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு உதவி ஆணையாளர் பதவி

அரியாலை, டிசெ. 10

யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றும் மூன்று கூட்டுறவுத் திணைக்கள பரிசோதகர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

திணைக்கள பரிசோதகர்களான இ விஜயரெத்தினம் சு. கணேசமூர்த்தி, கு பால சுப்பிரமணியம் ஆகிய மூவருமே கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டவர்கள் ஆவர்.

இதேவேளை — முல்லைத்தீவில் என். கந்தசாமி, திருகோணமலையில் செல்வி பீ. சுவாம்பிள்ளை, ஆர் குருகுலசிங்கம் ஆகிய கூட்டுறவு பரிசோதகர்களும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் இவர்களுக்கான பதவி உயர்வுக்கு தங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுத் திணைக்களங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பதவி இவர்களுக்கு விரைவில் வழங்கப்படலாம் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

(ஐ-17)

## வலுவிழந்தோர் தின நிகழ்வு

நவாலி, டிசெ. 10

பிரான்பற்று மாதர் சங்கம் நடத்தும் உடல் வலுவிழந்தோர் தினம் நாளை சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு பிரான்பற்று கலைமகள் வித்தியாசாலையில் சங்கத் தலைவி க. பவளராணி தலைமையில் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கா. சந்திரராசாவும், கௌரவ விருந்தினராக ஜி ரி சற் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி பொன்மலர், மானிப்பாய் அரிமாக் கழகத்தலைவர் ஆர். சிவயோகமும் கலந்து கொள்வார்கள்.

இதில் 'வலுவிழந்தோர் மத்தியில் தம் கடமை' என்னும் பொருள் பற்றி த. சிவபாதம் (புத்தொளி) சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

(ஐ-100)

## அச்சுவேலி பொதுச் சந்தையில் இறைச்சிக்கடைகள் சோதனை

வலி கிழக்கு, டிசெ. 10

இறைச்சிக்கடை ஒன்றில் அனுமதியின்றி வெட்டி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த மாட்டிறைச்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை அச்சுவேலிச் சந்தையில் உள்ள இறைச்சிக் கடை ஒன்றில் இடம்பெற்றது.

அச்சுவேலி பொதுச் சுகாதார பரிசோதகர் வி. இராஜேந்திரா சந்தைப் பகுதிகளில் உள்ள இறைச்சிக் கடைகளில் திடீர்ப் பரிசோதனையினை நடத்திய போதே அனுமதியின்றி இறைச்சிக்காக மாடு வெட்டப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டு இறைச்சியாவும் அழிக்கப்பட்டதுடன் கடை உரிமையாளர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

(ஐ-180)

## பயிற்சி நெறி

நவாலி, டிசெ. 10

யாழ் மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர பயிற்சி நெறி சாதாரண பிரிவு, உயர்பிரிவு ஆகிய பயிற்சி நெறிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 24 ஆம் திகதியாகும்

(ஐ-100)

## குடாநாட்டில் விற்பனையாகும் கலப்பட நல்லெண்ணெய்!

வலிகாமம் தெற்கு, டிசெ. 10

யாழ். குடாநாட்டில் விற்கப்பட்டு வரும் நல்லெண்ணெய்யில் கலப்படம் காணப்படுவதாகச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மல்லாகம், அளவெட்டி போன்ற இடங்களில் கலப்படம் செய்யப்பட்ட நல்லெண்ணெய் விற்பனைக்கிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நோயாளர்கள். சிறுவர்கள். வயோதிபர்கள் ஆகியோரின் முக்கிய மருந்துத் தேவையாக விளங்கும் நல்லெண்ணெய்யில் கலப்படம் செய்வது சமூகவிரோதச் செயலாகும் என சுகாதார பகுதியினர் சுட்டிக்காட்டி உள்ளனர்.

பல்வேறு இடங்களிலும் விற்பனைக்கிருந்த நல்லெண்ணெய்ப் போத்தல்களைச் சுகாதார பரிசோதகர்கள் எடுத்துச் சென்று குளிரூட்டியில் வைத்துப் பரிசிலனை செய்து பார்த்தபோது பெரும்பாலானவை கலப்படம் செய்யப்பட்டவையாகக் காணப்பட்டுள்ளன.

விற்பனையாளர்களிடம் இதுபற்றி விசாரித்தபோது உற்பத்தியாளர்கள் மெழுக்கிட்டுக் கொண்டுவந்து தரும் நல்லெண்ணெய்யையே தாம் விற்பனை செய்வதாகவும்—

உற்பத்தி நிலையங்களில்—செக்கு ஆலைகளில் — எண்ணெய் தயாராகும் போதே கலப்படம் செய்யப்படுவதாகவும்—

தெரிவித்துள்ளனர்,

இதனைத் தொடர்ந்து சுகாதாரப் பிரிவினரும், சுகாதாரப் பரிசோதகர்களும் நல்லெண்ணெய் உற்பத்தி நிலையங்களுக்குத் திடீர் விஜயங்களை மேற்கொண்டு கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

நல்லெண்ணெய்யின் உபயோகத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் முறையில் கலப்படம் செய்து மக்களை ஏமாற்ற வேண்டாம் எனவும் சுத்தமான— தரமான—எண்ணெயைத் தயார் செய்து வழங்குமாறு நல்லெண்ணெய் உற்பத்தியாளர்களை சுகாதார பகுதியினர் கேட்டுள்ளனர்.

(ஐ-152)

## 2000 ஆம் ஆண்டின் பாடசாலைத் தவணைகள்

வலிகாமம் தெற்கு, டிசெ. 10

2000 ஆண்டுக்கான பாடசாலைத் தவணை அட்டவணையை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி —

முதலாம் தவணை ஜனவரி மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட) நடைபெறும்.

இரண்டாம் தவணை ஏப்ரல் மாதம்24ஆம்திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஜூலை மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட) நடைபெறும்.

மூன்றாம் தவணை ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் டிசெம்பர் மாதம் [illegible] ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட) நடைபெறும்.

(ஐ-152)


## பொதுமக்கள் கவனத்திற்கு

இம்மாதம் 21 ஆம் நாள் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக ஏதேனும் முறைகேடுகள் நடைபெறுவதாக அறிந்திருப்பின் அவை குறித்து.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டுக் குழுவிடம் தொடர்பு கொள்ளவும்
(PAFFREL)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி (கொழும்பு)

1. PAFFREL
93/10, Dutugemunu Street,
Colombo - 6.
T. P. 01-828544 / 829013
FAX 828597

2. No. 14, Mathews Road,
Deogu Street,
Jaffna.
T. P. 2571

(71670)



## தேர்தல் வாக்கு

卐 தேர்தல் வாக்கு ஒரு மனித உரிமையாகும்.
卐 தேர்தல் வாக்கு அரசியல், நீதிக்கு உட்படுகின்றது.
卐 வாக்குப் பலத்துடன் எங்கள் உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு.
卐 உங்கள் வாக்கை நீங்களே பாவியுங்கள்.
卐 உங்கள் வாக்கை களவு செய்வதற்கு இடம் அளிக்க வேண்டாம்.
卐 உங்கள் வாக்கை வீணாக்க வேண்டாம்.
卐 கள்ள வாக்கு போடுவதற்கு சீட்டை களவு செய்பவர்களை அனுமதிக்காதீர்கள்.
卐 கள்ள வாக்கு போடுபவர்களை தடை செய்வதற்கு நேர காலத்துடன் உங்கள் வாக்குகளை உபயோகியுங்கள்.

ALLIANCE FOR JUSTICE

(71671)



ஊர்காவற்றுறை
உதவி அரசாங்க அதிபர் பணிமனை

## கேள்வி அறிவித்தல்

எழுவைதீவு குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு கடல் மார்க்கமாக நீர்த் தாங்கிகள் கொண்டு செல்வதற்குத் தேவைப்படும் நல்ல நிலையிலுள்ள கண்ணாடி இழைநார் இயந்திரப் படகு ( Fibre glass boat fitted with Engine ) வழங்குவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 17-12-99 ஆம் திகதி முற்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விச் சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அச்சமயம் கேள்விதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம். கேள்விகள் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பலாம்.

பிரமாணங்கள், விவரங்கள் பின்வருமாறு:

| படகு கொட்டு Hull) | இயந்திரம் |
| --- | --- |
| தாங்கும் எடை:- $3\frac{1}{2}$ தொன் | குதிரை வலு:- 30 HP |
| நீளம் (Bow to Stern):-28 அடி | பாதுகாப்பான இயந்திர அறை அமைந்திருத்தல் வேண்டும். |
| அகலம்:- $6\frac{1}{2}$ அடி — 8 அடி வரை. | |

மேற்குறித்தவற்றை விட இயன்றளவு மேலதிக விவரங்கள், தரவுகளைச் சமர்ப்பிப்பது கேள்விகளின் பரிசீலனைக்கு உதவும். படகு, இயந்திரம் தொடர்பான வல்லுநர்களின் பரிசோதனை, சிபார்சுக்கு அமையவே முடிவு எடுக்கப்படும். கொள்வனவுக்குத் தெரிவு செய்யப்படும் படகு ஊர்காவற்றுறை இறங்கு துறையில் கையளிக்கப்பட வேண்டும்.

( ஜே. எக்ஸ். செல்வநாயகம் )
உதவி அரசாங்க அதிபர்,
ஊர்காவற்றுறை.

10—12—1999

[சி/10158]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான
# சுரேஷ் பிரேமச்சந்திரனின் அறிவிப்பு
# கட்சி அமைப்புக்களின் தீர்மானமே!

### ஈ. பி. ஆர். எல் எவ். மன்னார் செயலாளர் அறிவிப்பு

மன்னார், டிசெ. 10

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட கருத்து அவரது சொந்தக் கருத்தல்ல. அது பல்வேறு பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்களுடன் ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவாகும் என்று ஈ.பி.ஆர். எல். எவ். அமைப்பின் மன்னார் மாவட்டப் பிராந்தியச் செயலாளர் குமரேஷ் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர் எல்.எவ். அமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவு நிலை தொடர்பாக குமரேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக எமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கி கட்சிச் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் அதிகாரபூர்வமாக நாட்டு மக்களுக்கு அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இரு பேரினவாதக் கட்சிகளுக்கும் வாக்களிக்க முடியாது என்று தெரிவித்து அதற்கான காரணங்களையும் அவர் விளக்கியிருந்தார்.

இந்தக் கருத்து சுரேஷ் பிரேமச்சந்திரனின் தனிப்பட்ட கருத்து என்று வரதராஜப் பெருமாள் கூறியுள்ளார். இது மிகவும் தவறானது.

மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிராந்தியக் கமிட்டிகளின் தோழர்கள் கடந்த முதலாம் திகதி செயலாளர் நாயகத்துடன் நடத்திய கூட்டத்தில் மேற்கண்ட கருத்து எம்மால் வலியுறுத்தப்பட்டது. இது மாத்திரம் அல்லாமல் ஜேர்மனி, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருக்கும் பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்தும் இதுவே.

இந்த நிலையில் வரதராஜப் பெருமாள் கொழும்பில் இருந்து வரும் அரச பத்திரிகை ஒன்றுக்குக் கொடுத்த செய்தியானது தவறானதும் கட்சி நிலைப்பாட்டுக்கு விரோதமானதும் ஆகும் என்றே மன்னார் பிராந்தியக் கமிட்டி நம்புகிறது.

அது மாத்திரமல்லாமல் மத்திய சமிட்டிக் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்கவில்லை என்று கூறும் வரதராஜப் பெருமாள், என்ன அடிப்படையில் ஒரு வாரத்துக்கு முன்னரே ஆளும் கட்சி சுவரொட்டிகளை யாழ்ப்பாணம் அனுப்பி அங்கு ஒட்டும்படி கேட்டார்?

இதுவே அவர் ஏற்கனவே ஆளும் கட்சிக்கு ஆதரவாக முடிவெடுத்துச் செயற்படுகிறார் என்பதைக் காட்டுகிறது. எனவே பெருமாளின் கருத்துக்கள் பித்தலாட்டமானதும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய செயலுமாகும்.

எனவே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கட்சி எடுத்துக்கொண்ட நிலைப்பாடானது ஜனநாயக பூர்வமாகக் கட்சியின் அமைப்புக்களுடனும் தோழர்களுடனும் கலந்து பேசிக் கட்சி எடுத்த முடிவாகும். இந்த முடிவுக்கு மன்னார் பிராந்தியக் கமிட்டியும் மன்னார் மாவட்டக் கட்சித் தோழர்களும் செயலாளர் நாயகத்தின் கருத்தை முழுமையாக ஆதரித்து நிற்கின்றனர் என்பதை முழுத் தமிழ் மக்களுக்கும் தெளிவுபடுத்திக் கொள்கின்றோம் — என்றுள்ளது. (இ-3)

# மருந்துப் பொருள்கள் அதிக விலையில் விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மருந்துக் கடைகளில் மருந்துப் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு விலைகளில் மருந்துப் பொருள்கள் விற்பனையாவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

மருந்துப் பொருள்களின் விலையேற்றம் தொடர்பாக மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினால் உள்நாட்டு வியாபாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளருக்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மருந்துப்பொருள்களை விற்பனை செய்யும் மருந்து விற்பனை நிலையங்கள் மருந்துகளின் மொத்த மற்றும் சில்லறை விலைப் பட்டியல்களை தமது கடைகளில் தொங்க விட வேண்டும் என்றும்—

மருந்துப் பொருள்களின் கொள்கலன்களில் அவற்றின் விலைகள் குறிக்கப்படவேண்டும் என்றும் —

சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (உ-5)

## மட்டுப்படுத்திய மின்சாரம்

வடமராட்சி, டிசெ. 10

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் வழங்கப்பட்டு வந்த 24 மணிநேர மின்விநியோகம் பெரும் பகுதி நேரங்களில் தடைப்படுவதால் ஜெனரேட்டர் மூலம் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரையும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரையும் முன்னிரவிலும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. (இ-173)

## மரக்கறி விதைகள் வழங்கல்

வடமராட்சி, டிசெ. 10

உலக உணவு நிறுவனத்தால் வடமராட்சிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன.

புலோலி கமநல சேவை நிலையத்தில் வைத்து போஞ்சி, கறிமிளகாய், வெண்டி, கோவா, கத்தரி ஆகிய விதை இனங்கள் வழங்கப்பட்டன. (க-173)

## யாழ். மாவட்டத்தில்
# வாக்களிப்பு நிலையங்கள் இம்முறை கொத்தணியாக!

யாழ்ப்பாணம், டிசெ. 10

ஜனாதிபதி தேர்தலின் போது யாழ். மாவட்டத்தில் கொத்தணி முறையிலான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

423 வாக்களிப்பு நிலையங்களை ஒன்றாக்கி 148 கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்தக் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

1998 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது தெல்லிப்பழைப் பகுதியில் இத்தகைய கொத்தணி முறையிலான வாக்களிப்பு நிலையங்கள் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## வீடியோ காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் காண்பிக்கப்படும் — திரைப்படமாக்கப்பட்ட இலக்கியப்படைப்புகளின் வீடியோப்பட வரிசையில் ஜெயகாந்தனின்' சில நேரங்களில் சில மனிதர்கள்' வீடியோ காட்சி இவ்வாரம் இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 10மணிக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை மண்டபத்தில் இக்காட்சி இடம்பெறும். (உ-5)

## பள்ளிமுனையில் சடலம்

வவுனியா, டிசெ. 10

மன்னார் — பள்ளிமுனை கடற்கரையில் கடந்த செவ்வாய் காலை இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

சடலத்தை மீட்ட பொலீஸார் இனங்காணும்பொருட்டு அதனை மன்னார் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (உ-7-164)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி பொன்னையா தங்கமுத்து

மலர்வு 25 – 11 – 1912 உதிர்வு 11 – 11 – 1999

11 – 11 – 1999 இல் சிவபதமடைந்த எமது பாசமிகு அன்புத்தாயாரின் மரணச்செய்தி கேட்டவுடன் எமது இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், தொலைபேசி மூலமும், கடித மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பலவழிகளிலும் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நாம் இருகரம் கூப்பி எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை சனிக்கிழமை (11—12—1999) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கட்டுப்பிலானை,
கோப்பாய் வடக்கு.
கோப்பாய். (71526)

KOBE KOBE KOBE KOBE KOBE

பணத்தை திருப்பி பெறும் உத்தரவாதம்
நம். 1
இலங்கையில் அதிகளவு விற்பனை
KOBE
UHF/VHF கலர் T.V பூஸ்டர்

• இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
• வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
• விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை

KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு

பூஸ்டர்கள்
சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு தனியான அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்

விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT

அன்டனா நிபுணர்கள்:
LANKA NIPPON ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736

Finally it is KOBE you will settle for ........!
must be KOBE ...... the Original
“ நிப்போனின் ” சகோதர நிறுவனம்

(சி/9857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதைக்கப்படும் மனித உரிமைகள்!

மனித உரிமைகள் அனைத்துலக நாள் இன்று டிசெம்பர் பத்தாம் திகதியாகும். மனிதனுக்குள்ள உரிமைகள் பலப்பல. அவற்றில் அடிப்படை உரிமைகள் அவனது பிறப்புரிமைகளாகக் கருதப்படுகின்றன. மனித வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் உள்ள முக்கியமான உரிமைகளை உள்ளடக்கியதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனம் அமைந்துள்ளது.

அந்தச் சாசனத்தில் இலங்கை உட்பட ஐக்கியநாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துலக நாடுகளும் ஒப்பமிட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரையில் கடந்த சில வருடங்களாக மட்டுமே, மனிதஉரிமைகள் குறித்துக் கணிசமான அளவில் பேசப்படுகிறது. உண்மையைச் சொல்வதானால், மேற்கு நாடுகள் நிதி உதவி மற்றும் கடன் உதவிகளை வழங்குவதற்கு மனித உரிமைகள் பேணப்படுதலை ஓர் அளவுகோலாக நீட்டிக் காட்டிய பின்னரே இலங்கை இது விடயத்தில் கண்ணைத் திறந்து பார்ப்பதாகக் காட்டிக் கொண்டது.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் எதிரணியில் இருந்தபோது மனித உரிமைகளைப் பேணுவதற்கு முழு அளவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறியவர்கள் இப்போதைய ஆளுந்தரப்பினர். ஆனால் ஆரம்பத்தில் ஏதோ சிறிது ஆலாபனம் பண்ணினார்கள் இப்போது சுருதி மாறிய நிலையாகி விட்டது— நாடளாவிய ரீதியில்.

தமிழ்ப் பிரதேசங்களைப் பொறுத்த வரையில் இங்கு வாழும் மக்கள் தமது அரசியல் உரிமைகளைக் கேட்கிறார்கள் என்ற ஒரே காரணத்துக்காக, அவர்களதுவாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டுள்ளன. ஒருசிறுஉதாரணம்: இதே நாட்டுக்குள் போக்குவரத்துச் செய்யும் உரிமை தமிழர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் பிரகடனம், இனக் குழுமங்களின் உரிமைகளை மிக ஆணித்தரமாக வலியுறுத்துகின்றது சிறப்பாகத் தேசிய இனங்களின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டியதன் அவசியத்தை இடித்துரைக்கிறது.

ஐ நாவின் மேற்படி பிரகடனத்திலும் மறுப்பில்லாமல் ஒப்பமிட்ட இலங்கையோ, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வாயால் பேசவும் கூசுகிறதே! தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதற்கு விரும்பாத இலங்கை அரசுகள் அதிகாரப் பரவலாக்கம், கூடுதல் நிர்வாக அதிகாரம் என்று கூறித் தமது மனித உரிமை மீறல் கொடுமையை வர்ணம் பூசி மறைக்க முயல்கின்றன,

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்கினால் அவர்கள் தனிநாடு உருவாக்குவதற்கு விதை தூவிக் கொடுத்த கதையாகிவிடும் என்று கூக்குரல் போட்டு வருகின்றன. அந்தக் கூக்குரலால் தமிழர்களின் நியாயமான உரிமைக் குரலை அமுக்கிவிடப் பார்க்கின்றன.

அதன் பொருட்டுத் தமிழ்ப் பிரதேசம் முழுவதிலும் இராணுவ அடக்குமுறை கொழும்பு அரசுகளுக்குத் தேவைப்படுகின்றது. அதனோடு தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குரிய அடிப்படை உரிமைகள் கூடத் தீண்டப்படுகின்றன இந்த வகையில் ஒட்டுமொத்தத்தில் ஈழத் தமிழர்களின் மனித உரிமைகள் கொழும்பு அரசுகளால் புதைக்கப்படுதலே தொடர் யதார்த்தமாகி வருகிறது இந்த நிலை எப்போது மாறும்?

# பண்ணோடு இசைபாடி பரமனை வழுத்தினால் மண்ணிலே நல்ல மாண்புடன் வாழ்ந்திடலாம்

### ஞானக் கதிர்

இறைவழிபாட்டில் இசைக்குப் பெரும் பங்குண்டு; இறைவன் இசைமயமாகக் காட்சியளிக்கின்றான் என்பதை திருமுறைகள் எடுத்துக் காட்டுகின்றன. ''ஏழிசையாய் இசைப்பயனாய்'' என்று சுந்தரரும் ''ஓசைஒலியெலாம் ஆனாய் நீயே'' என்று நாவுக்கரசரும் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

நாயன்மார்கள் தலயாத்திரையை மேற்கொண்டு தேவாரங்களைப் பாடி இறைவனை ஏத்தி வழிபட்டு அருள் பெற்றனர்; சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவன், ''அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்பாடு'' எனப் பணித்ததிலிருந்து பண்ணோடு பாடிப் பரவுவது சிறந்த வழிபாடு என்பது உறுதி.

இறைவன் மீது பக்தி செலுத்துவதற்கு திருமுறைகள் பெருந்துணை புரிகின்றன நாயன்மார்களால் பாடப்பெற்ற பாடல்கள் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட ஓதி உணர்ந்து உருகிப் பாடி லயிக்கும் தன்மை வாய்ந்தவை. நாவுக்கரசர் ''தமிழோடிசைபாடல் மறந்தறியேன்'' என்று பாடி இசையின் மகிமையை எடுத்து விளக்கிய தன்மையும் உய்த்துணரற்பாலது.

கண்ணன் கையில் புல்லாங்குழலும் கலைமகள் திருக்கரத்தில் வீணையும் இருப்பது இறைவனோடு இசை இணைந்து விளங்கும் சிறப்பை உணர்த்துகின்றன. ''இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்'' என்ற மணிவாசகரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல் ஆலய வழிபாட்டில் இசைக் கருவிகள் பயன்படுத்தப் பட்டன என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது.

அதுமாத்திரமன்றி ஞானசம்பந்தர் திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றமை, இராவணன் கைலையங்கிரியின் கீழ் நெரிபட்டபொழுது சாமகானம்பாடி நீண்ட ஆயுளும் வாளும் பெற்றமை என்பனவும் இசையின் மகத்துவத்தை விளக்கி நிற்கின்றன. இசைக்கு அபாரசக்தி இருக்கிறதென்பதை விஞ்ஞானிகளும் மெய்ஞ்ஞானிகளும் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

தாவரங்கள் செழிப்பாக வளர இசை உதவுகிறது; மிருகங்களும் இசையின்பத்தில் ஈடுபட்டு அமைதியடைகின்றன. பண்ணோடு பாடப்பெறும் திருமுறைகள் மனமகிழ்ச்சியையும் அமைதியையும் பௌதிக ரீதியாக உடலிலே நல்ல மாற்றங்களையும் உண்டாக்குகின்றன

பண்ணோடமைந்த பாடல்கள் மந்திரசக்தி வாய்ந்தவை. அடைத்த கதவைத் திருமறைக் காட்டில் திறந்தும் பாண்டியனுடைய நோயைத் தீர்த்தும் மதம் கொண்ட யானையை அடக்கியும் திருமுறைகள் வேதங்களுக்கு நிகராக விளங்குகின்றன.

இறைவாத இன்ப அன்பை இறைவனிடம் பெற்றகாரைக்காலம்மையாரும் அருணகிரிநாதரும் பாடும் பணியை இறைவனிடம் கேட்டுப் பெற்றனர்.

இன்னிசையால் தமிழ் வளர்த்த நாயன்மாரும் நம் முன்னோரும் இசைபாடி இறைவனை ஏத்தும் பணியில் தம்மை அர்ப்பணித்தமையை புராண வாயிலாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் வளர்ந்து வரும் நம் இன்றைய சமுதாயம் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுவதற்குப் பின்நிற்காது முன்வர வேண்டும் ஆலயமெங்கணும் திருமுறை ஓங்கி ஒலிக்க தம்மாலியன்ற மட்டும் முயற்சி செய்வது சைவ மக்கள் ஒவ்வொருவரதும் பிரதான கடமையாகும்.

**க. சிவசங்கரநாதன்**

*

# இஸ்ரேல் — சிரியா மீண்டும் பேச்சு!

## அடுத்த வாரம் அமெரிக்காவில்

நியூயோர்க், டிசெ. 10

இஸ்ரேலுக்கும் சிரியாவுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேச்சுக்கள் அமெரிக்காவில் நடைபெறும் என்றும்—

இஸ்ரேலிய பிரதமரும் சிரிய ஜனாதிபதியும் இந்தப் பேச்சுக்களுக்கான தமது பிரதிநிதிகளைதெரிவு செய்ய இணங்கியதை அடுத்து சமாதான முயற்சிகளில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும்—

கிளின்ரன் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மெடலின் ஆல்பிறைற் தற்போது மத்திய கிழக்குக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

அவர் இஸ்ரேலியப் பிரதமர் எகுட்பராக்குடன் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. சிரியாவுடனான சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் மேற்குக்கரைப் பிரதேசத்தில் யூதக் குடியிருப்புகளை ஏற்படுத்துவது குறித்தும் அவர்கள் பேச்சு நடத்தியதாக கூறப்பட்டது.

இதனை அடுத்தே இஸ்ரேல்—சிரிய பேச்சுக்கான இணக்கம் ஏற்பட்டுள்ளதாக ஜெருசலேம் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-6-9)

# ஒரிஸாவைப் பெரும் புயல் மீண்டும் தாக்கலாம்

புதுடில்லி, டிசெ. 10

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தை பெரும் புயல் ஒன்று மீண்டும் தாக்கக் கூடிய அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கக் கடலின் உருவாகி உள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நாகபட்டினத்துக்கு கிழக்கே 700 மைல் தொலைவில் மையம் கொண்டிருப்பதாகவும் —

அது புயலாகமாறி ஒரிஸா கரையோரங்களையும் ஆந்திரப் பிரதேச கரையோரங்களையும் தாக்கலாம் என்றும் —

வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

அண்மையில் ஒரிஸாவில் வீசிய புயலால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ 6-9)

## நாளை

கார்த்திகை 25

சனிக்கிழமை

திதி: திருதியை முற்பகல் 10.28 வரை

நட்சத்திரம்: உத்தராடம் பின் இரவு 4 20 வரை.

சதுர்த்தி விரதம்

சுபநேரம்: 3.19—4.49

ராகுகாலம்: 9.19 -10 49

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

ஏழையின் முகம் மலரும் போது இறைவனின் உள்ளமும் மலர்ச்சி கொள்கின்றது.

— மாப்பஸான்

### பாபர் மசூதி வழக்கில் சம்பந்தப்பட்ட

# அமைச்சர்கள் மூவரும் பதவி விலகத் தேவையில்லை

## வாஜ்பாய் தெரிவிப்பு

### உலக அரங்கில்

புதுடில்லி, டிசெ. 10

பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மத்திய அமைச்சர்கள் மூவரும் பதவி விலகத் தேவையில்லை என்று பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கில குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மத்திய அமைச்சர்களான எல். கே. அத்வானி, முரளி மனோகர் ஜோசி செல்வி உமா பாரதி ஆகியோரைப் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

வழக்கு ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் அமைச்சர் பதவி வகிக்கக் கூடாது என்று அரசமைப்பில் தெரிவிக்கப்படவில்லை என்றும்—

மூன்று அமைச்சர்களும் பதவி விலக விரும்பியபோதும் அதைத் தாம் அனுமதிக்கவில்லை என்றும்— வாஜ்பாய் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

# ஷெரிப் மீது குற்றப்பத்திரிகை கராச்சி நீதிமன்றில் தாக்கல்

இஸ்லாமாபாத், டிசெ. 10

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் மீது சுமத்தப்பட்டுள்ள தேசத்துரோகம், கடத்தல், கொலைச்சதி ஆகிய குற்றச்சாட்டுக்கள்தொடர்பான குற்றப் பத்திரிகை நேற்று முன்தினம் கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது

எனினும் இந்தக் குற்றப் பத்திரிகை முழுமையாகத் தயாரிக்கப்படாத காரணத்தால் நவாஸ் ஷெரிப் மீதும் அவரது 6 சகாக்கள் மீதும் முழுமையான குற்றப்பத்திரிகையை எதிர்வரும் திங்களன்று சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

வழக்கு விசாரணைகள் நீதியான முறையில் நடைபெறுவதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின உரையாடல்கள் அடங்கிய ஒலி, ஒளி நாடாக்களை நீதிமன்றில சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்

அதே சமயம்

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்காக நேற்று முன்தினம் நீதிமன்றில ஆஜர் செய்யப்பட்ட நவாஸ் ஷெரிப் தனக்கு எதிராக என்னென்ன குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று முழுமையாகத் தெரியாது என்று செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(ஐ-6-9)

# ஆப்கானிஸ்தான் வங்கிகளுக்கு பாகிஸ்தானில் மூடு விழா

பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் வங்கிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளதாகவும்—

தலிபான் அமைப்பின் வங்கிக் கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளதாகவும்—

அறிவிக்கப்பட்டுள்ளது

தலிபான் அமைப்பின் மீது ஐ. நா. பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்தியதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தானுக்குரிய சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருமானம் தலிபான்களைச் சென்றடையாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் சத்தார் தெரிவித்தார்

ஐ. நாவின் பொருளாதாரத் தடைகளால் ஆப்கானிஸ்தான் மக்களின் இன்னல்கள் அதிகரிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்

(ஐ-6-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர் சிற்றம்பலம் ஏபிரகாம்
# நூற்றாண்டுவிழா சி

## கிறிஸ்துவத்தை வாழ்ந்து காட்டிய உத்தமர்

பழம்பெரும் புகழ்பூத்த அச்சுவேலிக் கிராமம் நன்செய் புன்செய் நிலங்களால் சூழப்பெற்று வடமராட்சியையும் வலிகாமத்தையும் இணைக்கும் பாலமாகவும் யாழ்ப்பாணம்- பருத்தித்துறை வீதியின் நடுநாயகமாகவும் பண்டுதொட்டுப் பல அறிஞர்கள், கலைஞர்கள், கனவான்கள், தனவான்கள், மண்ணைப் பொன்னாக்கும் விவசாயிகள் வாழ்ந்த, வாழுகின்ற முக்கனிகள் மட்டுமல்ல திராட்சைக் கொடிகளா? வெற்றிலையா? எப்பயிரும் செழித்தோங்கும். செம்மண் செறிந்த, பல சிறு பகுதிகளை ஒன்று சேர்த்த பெருங் கிராமமாகும். தென் மூலை என அழைக்கப்படுகின்ற கத்தோலிக்கர் செறிந்து வாழும் பகுதியிலே தம்பிமுத்துப் புலவர் என்னும் பெரியார் யாழ். மண்ணில் அச்சுக்கூடம் அமைத்துப் புகழ் பெற்றார். அவர் மானிப்பாயிலுள்ள கல்வியாளர்களுடன் உறவு கொண்டு, கணவர் இறந்துபோக ஒரு வயது மகனோடு வாழ்ந்த, அடக்கமும், நற்குணமும், அழகும் நிறைந்த இந்து மதத்தினரான அன்னமுத்து என்னும் நல்லாளை விதவை என்றும் பாராது மதம் மாற்றி திருமணம் புரிந்து அச்சுவேலிக்கு அழைத்துவந்தார். வயித்திலிங்கம் என்னும் பெயருடன் விளங்கிய மகனுக்கு மதமாற்றத்தின்போது 'ஞானப்பிரகாசம்' என நாமகரணஞ் சூட்டப்பட்டது. இவரே 'நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்' என உலகம் போற்றும் பன்மொழி வித்தகரா ார்.

இவரது தாய் அன்னமுத்துவின் தம்பியாகிய வயிரமுத்து கார்டினரும் தன் சகோதரி வழிவந்து அச்சுவேலி நரசிங்க முதலியார் பரம்பரையில் வயித்தியாம்புள்ளைக்கும் மரியப்பிள்ளைக்கும் மகளாகிய அழகும், அடக்கமும் நற்குணங்களும் நிரம்பிய சலோமைப் பிள்ளையைத் திருமணம் புரிந்ததன் பேறாய் அவர்களுக்கு மூத்த புத்திரனாக அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயத்துக்கு அருகிலுள்ள முதலியார் வளவில் 1899 ஆம் ஆண்டு தைத் திங்கள் ஆறாம் நாளில் பிறந்தவர்தான் நாமின்று நூற்றாண்டு விழாக்காணும் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் அவர்கள். கத்தோலிக்க மக்கள் மூவரசர் தினம் கொண்டாடும் தினத்தில் பிறந்ததால் இராசயோகத்தில் பிறந்துள்ளார் எனவும் ஆருடம்கூறினர்.

— திருமதி பிலோமினா .R

முதலியார் பரம்பரையில் முதலியார் வளவில் உதித்த விழா நாயகன் தனது ஆரம்பக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிற் கற்றார். தந்தையார் வைரமுத்து கார்டினர் அவர்கள் அரசாங்கத்தில் உயர் பதவி வகித்ததால் தனது குடும்பத்தையும் தலைநகர் கொழும்புக்கு அழைத்துக் கொண்டார். கொழும்பு சென். யோசப் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்த விழாநாயகன் " லண்டன் மற்றிக் " பரீட்சையில் சித்தியடைந்து சட்டப் படிப்பையும் மேற்கொண்டார்.

அரச துறையிலோ சட்டத் துறையிலோ அவர் மனம் நாட்டங் கொள்ளவில்லை. சுதந்திரமான தொழில்துறையில் நாட்டங் கொண்டு முதன் முதலில் " சிலோன் தியேட்டேஸ் " நிறுவனத்தை நிறுவித்தொழிலதிபராகி இலங்கையில் சினிமாத்துறையின் முன்னோடியாகத் திகழ்ந்து இருபத்தைந்துக்கு மேற்பட்ட தியேட்டர்களுக்கு அதிபதியாகி சினிமாத்துறையை வளர்ப்பதில் ஆர்வங் கொண்டுழைத்தார். தொடர்ந்து படிப்படியாகக் காலிமுகத் திடலில் அமைந்துள்ள " கோல் பேஸ் ஹோட்டல் ", " சிலோன் பிறின்ரேஸ் " நிறுவனம், " ஒவ்விஸ் இக்குவிப்மென்ற் " நிறுவனம், " ரக்சேஸ் " நிறுவனம் போன்ற பதினைந்துக்கு மேற்பட்ட நிறுவனங்களைப் படிப்படியாக நிறுவியும் " காகில்ஸ் ", "மில்லேஸ்" போன்ற பல நிறுவனங்களின் பங்கு தாரராயுமிருந்து தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் புகழ் பெற்ற ஒப்பற்ற தொழிலதிபதியானார். சுகபோக வாழ்வு வாழ்ந்தாலும் ஏழைகள் பால் அதிக இரக்கமும் கருணையும் கொண்ட காருண்ய சீலன். தொழில் வாய்ப்பின்றித் தவித்த ஏழைத் தொழிலாளர் பலருக்கு " றிக்சோ " வாங்கிக் கொடுத்தும் வேறு அவரவர் தேவைக்குதவியும் அவர்கள் முட்டின்றி வாழ வழி சமைத்தார். வேண்டியார்க்கு வேண்டியாங்கு தேவையறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்தார்.

அக்காலத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய குதிரைச் சவாரியில் அதிக நாட்டமும் ஈடுபாடும் கொண்டு முப்பது வகையான பல வகைக் குதிரைகளை வைத்திருந்து குதிரைச் சவாரியிலும் புகழ்பெற்றார். அவரது " குஞ்சலாட்டா ", " கொட்டன் ஹோல் " என்ற குதிரைகள் அவருக்குச் செல்வத்தையும் புகழையும் ஈட்டிக் கொடுத்தன. பல குதிரைகளுக்குச் சொந்தக்காரியான செல்வச் சீமாட்டி "லற்றீசியா" மனைவியாக வாய்த்ததும் குதிரைச்சவாரி நடத்த உறுதுணையாயிற்று.

தனது பிறந்தகமான அச்சுவேலி மண்ணுக்கு அவர் ஆற்றிய மகத்தான சேவையினைச் சற்று நோக்குவோம். வருடத்தில் ஓரிருமுறை உறவினர்களின் நன்மை, தீமைகளில் பங்குபற்ற வந்து போய்க்கொண்டிருந்த குடும்பம் 1939 ஆம் ஆண்டில் இரண்டாம் உலக மகா யுத்தம் காரணமாகக் குண்டு விழவே கொழும்பிலிருக்கப் பயந்து குடும்பத்தார் அனைவருமே தாயக மண்ணை நோக்கி வரவேண்டியதாயிற்று. அச்சுவேலியில் தற்பொழுது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள வள்விலுள்ள வீட்டை அமைத்து அங்கு வாழலாயினர். அழிவில் ஆக்கம் பிறப்பதுபோல் அச்சுவேலிக்கும் மக்களுக்கும் விடிவுகாலம் உதயமாயிற்று. தான் பிறந்த மண்ணின் நிலையைக் கண்டு அதனை முன்னேற்றவேண்டுமென்ற ஆவல் கொண்டு பல பெரியார்கள், தனது மாமன்மார், அந்நாள்களில் எமது பங்குத் தந்தையாகவிருந்த திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தம்பி அருட்திரு பாலசுந்தரம் அடிகளார் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் திட்டம் உருவாகக் காலங்கனியலாயிற்று. எமது பங்கில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயிலக் கூடிய ஒரு சிறிய பாடசாலை மட்டுமே அப்போதிருந்தது. பெண் பிள்ளைகள் வெளியில் சென்று படிக்க விரும்பாமல் ஐந்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தியிருந்தனர். இதை அவருக்கு எடுத்துரைக்கவே பெண்கள் பாடசாலை அமைக்கச் சித்தங்கொண்டு கன்னியர்களுக்கும் பாடசாலைக்குமாகப் பெரு நிலப்பரப்பை வாங்கி அதில் பெரிய மண்டபம் பாடசாலைக்கென அமைத்து 'சென் திரேசா மகளிர் பாடசாலை' எனும் பெயரிட்டு 1946 ஆம் ஆண்டு தனது பிறந்த தினமான தை மாதம் ஆறாம் திகதி திறந்துவைத்தார். இந்தப் பெண்கள் கல்லூரியில் கன்னியர்கள் அதுவும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்கள் கொழும்பில் திறம்படச் சேவையாற்றுவதைக் கண்ணுற்று அவர்களை இங்கு அழைக்கவேண்டும் எனும் ஆவல் தூண்டவே அருட்திரு பாலசுந்தரம் அடிகளின் அனுசரணையுடன் யாழ். ஆயர் மேதகு கியோமர் ஆண்டகை அவர்களை வேண்டிக்கொண்ட தன் பேறாய் யாழ். மாவட்டத்துக்கு கார்மேல் சபைக் கன்னியர்கள் யாழ். மாவட்டத்துக்கு 1947 இல் முதன் முதலில் வந்திறங்கி அச்சுவேலியில் கால் பதித்து இந்த நாயகன் நிறுவிய சென். திரேசா மகளிர் பாடசாலையில் தமது சேவையினை ஆரம்பித்து தங்குவதற்கு மடமும் அமைத்து வாழலாயினர். கார்மேல் சபைக் கன்னியர்களை யாழ். மாவட்டத்துக்கு வரவழைத்த பெருமையும் செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினரையே சாரும். இக்கல்லூரி கோப்பாய்த் தொகுதியில் ஒரேயொரு மகளிர் கல்லூரியாகத் திகழ்கின்றது.

அடுத்து அச்சுவேலிக்குப் பிணி தீர்க்கும் மருந்தாக வைத்திய சாலை நிறுவ முனைந்த போது பலர் காணிகொடுக்க முன்வந்தனர். ஆனால் அவரோ சகல மக்களும் பயன்பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் பிரதான வீதியில் பெரு நிலப்பரப்பை வாங்கி அதில் ஆண்கள் பெண்களுக்கான தனித்தனி விடுதி, யுடன் கூடிய சகல வசதிகளையும் உள்ளடக்கிய வைத்தியசாலை மண்டபத்தினையும் பாடசாலை திறப்புவிழா நடத்திய தனது பிறந்த தினத்தில் அடிக்கல் நட்டு அமைப்பித்து அதே 1946 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆம் திகதி சுகாதார அமைச்சராகவிருந்த கௌரவ ஜோர்ஜ் டீ சில்வா அவர்களை அழைத்து வந்து திறப்பு விழாவினை வெகு கோலாகலமாக நடத்துவித்து அரசாங்கத்திடம் கையளித்தார். அன்றுஅவரால்வைத்திய சாலைக்கு முன்பாக நடப்பட்ட ஒட்டு மாங்கன்று வளர்ந்து கிளைகளோக்கிக் குளிர் நிழலைத் தருவதோடு அது மூவகையான கனிகளைக் கொடுப்பதாகவும் இருக்கிறதாம். தமது கிறிஸ்மஸ் பண்டிகையினை அரச மாளிகையிலோ நட்சத்திரக் ஹோட்டலிலோ கொண்டாடி மகிழக்கூடிய வசதிபடைத்திருந்தும் தன் ஊர்ப்பிறந்த சிறார்களுடன் கொண்டாட விரும்பித் தமது பாரியார் சகிதம் வந்து தான் நிறுவிய கல்லூரி மண்டப மேடையில் வைத்து பரிசுப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், உடுபுடைவைகள் ஆகியன சிறுவர் முதல் பெரியோர்வரை அனைவருக்கும் அன்பளித்து மகிழ்ச்சி கொண்டாடி எல்லோரையும் மகிழ்விப்பார்.

மேலும் எமது பங்குத் தேவாலய மூப்பராக இருந்து அரும்பெரும் தொண்டாற்றினார். தேவாலயத்தின் இரு மணிக் கோபுரங்கள், கோயில் "டோம்", விளையாட்டு மைதானத்துக்கான பெரு நிலப்பரப்பு போன்றவற்றை அன்பளிப்புச் செய்த பெருமையும் அவரையே சாரும். அத்துடன் பெரு நிலப்பரப்பைக் கொள்வனவு செய்து தேவையறிந்து நிலமில்லாத பலருக்குப் பகிர்ந்தளித்து வேண்டியவர்களுக்கு வீடுகளும் அமைத்துக் கொடுத்தார். யாழ். மேற்றிராசனத்துக்கு "அன்பகம்" அமலிவனம் போன்ற பெரு நிலப்பரப்பை வாங்கி அவற்றில் தோலகட்டி செபமாலைத் தாசர்சபைக் கன்னியர்களும் அருட்சகோதரர்களும் தங்க வழி வகுத்தார். நீச்சல் தடாகத்தோடு கூடிய வளவாய் "பாம் பீச்" ஓய்வு காலங்களில் தங்க அமைத்தார். யாழ். திருச்சபைக்கு அளப்பரிய சேவைகள் மறைபணிகள் ஆற்றியமைக்காக கத்தோலிக்க மதபீட அதி உயர் விருதான "செவாலியர்" பட்டம் 1947 ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். யாழ். ஆயர் மேதகு எமலியானுஸ்பிள்ளை காலத்திலும் மறை மாவட்டத்துக்கு அளப்பரும் சேவையாற்றினார்.

இலங்கை அரசாங்கத்தில் செனெற்றராக இருந்தும், சமூக சமயத் தொண்டனாக இருந்தும் தேசிய ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் ஆற்றிய அரும்பெரும் பணிக்காக ஆறாம் ஜோஜ் மன்னரால் சேர் (SIR) பட்டமும் வழங்கிக்கௌரவிக்கப்பட்டார். இலங்கை அரசாங்கமும் நாட்டுக்கும் மக்களுக்கும் அவர் ஆற்றிய சேவையினைக் கௌரவித்து "சேர். சிற்றம்பலம் கார்டினர் மாவத்தை"யை உருவாக்கி மகிமைப்படுத்தியுள்ளது. இது கொழும்பு மாநகரின் மையப் பகுதியில்அமைந்திருப்பது குறிப்பிடற்பாலது. இதுதமிழர்களாகிய எமக்கும் பெருமை.

1960 ஆம் ஆண்டு மார்கழி மாதம் கிறிஸ்மஸ் பண்டிகைக்குப் பரிசுப் பொருள்களுடன் அச்சுவேலிக்கு வரவிருந்த நாயகன் திடீரென நோய்வாய்ப்பட்டு சத்திரசிகிச்சைக்கு ஆளாகிப் பத்தாந் திகதி இறைபதம் அடைந்த செய்தி எமக்கெல்லாம் பேரிடியாகத் துயர வெள்ளத்தில் ஆழ்த்தியது. அச்சுநகர் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வன்; தேசிய சேவையாளன்; சமூகத் தொண்டன், பரோபகாரி; கொடை வள்ளல் எம்மை விட்டுப் போய்விட்டார்.

இத்தனை சிறப்புகளுக்குமுரிய இப்பெரியார் தனது பெயரை எந்த நன்கொடையிலும் பொறித்துப் பெருமை பாராட்ட விரும்பியவரல்ல "இல்லிடமற்றோர்க்கு இல்லிடமும், வஸ்திர மற்றோர்க்கு வஸ்திரமும், நோயுற்றோர்க்கு வைத்தியசாலையும்" கொடுத்து யேசு பெருமான் போதித்த போதனைகளின் படி "வலது கை செய்வதை இடதுகை அறியாது உன்னைப் போல் உன் அயலானையும் நேசிப்பாயாக" என்பதற்கொப்ப கிறிஸ்துவத்தை உலகில் வாழ்ந்து காட்டிய உத்தம புருடன்.

எமது மண்ணில் மக்கள் பிணியகன்று சுகமாக வாழ்ந்து அறிவொளி பெற்றுய்ய காலத்தின் தேவையறிந்து அவர் எமக்கு ஆக்கித் தந்த வைத்தியசாலையும், புனித திரேசா மகளிர் கல்லூரியும் கலங்கரை விளக்கங்களாக மிளிர்ந்து அன்னாரை எமது மனக் கோயிலில் சிற்பி செதுக்காத பொற்சிலையாக நிறுவி அவரின் ஆன்மசாந்தியடையப்பிரார்த்திப்பதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். இந்நன்னாளை உறவினர்கள், ஊரவர்கள் நண்பர்களா பங்குத் தந்தையுடன் இணைந்து கத்ததோலிக்க ஒன்றியம் நினைவு கூர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து மகிழ்கின்றது.



Senator Chev. Che
Chittampalam Abraha
K, St.George OBE K. S
K. St. Gregory.

## வையத்துள் வா
## வாழ்ந்த பெரு

விழா நாயகனி
மைத்துனி கல வ
உறவினாலும் வி
இணைச் செயலாளர்
யிலும் இம் மலருக்கு ஆ
வழங்குவதில் பெ
கொண்டு இறும்பூதெய்
றேன்.

'செனற்றர்', 'செ
'சேர்' ஆகிய மும்மண்
யும் ஒருங்கே சூடிய
கத்தோலிக்கப் பெரு
தால் எமக்குப் பெருமை
அவரது பெருமைக்கு
சான்று. அவரது தே
சேவையைக் கெ
இலங்கை அரசாங்கமே
சிற்றம்பலம்கார்டினர்
என்று தலைநகர் செ
இதயத்தில் அழியாச் சி
பொறித்துள்ளது.

தான் பிறந்தமண்
ஆற்றிய சேவைக்கு
வைத்தியசாலையு
திரேசா மகளிர் கல்லூ
ரது இரு கண்களா
மித்து எம்மைப் பா

'தோன்றிற்
தோன்றுக அஃதிலார்
வில் தோன்றாமை
என்ற வள்ளுவன் கூற்
கணமாய்க் கிறிஸ்துவ
வுலகில் வாழ்ந்து காட்
டத் தெய்வம்.

எந்த அன்பளிப்பி
பெயரைச் சூட்டவிரும்
சீலனின் நூறாவது பி
வையும் 39 ஆவது
தினத்தையும் நன்
கோடு மகிழ்வுடன்
கூர்ந்து இவரைப்போ
கார சிந்தனை படைத்
வள்ளல்கள் பலர் எம்
பிறக்க வேண்டுமென
நிற்கின்றேன்.

'எந்நன்றி கொன்றார்
வுண்டாம்
செய்ந்நன்றி கொன்ற

திரு. அ. ம. இ
அச்சுவேலிப் பங்கு க
ஒன்றியச் செ

செவாலியர் சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் நூ


வலி. கிழக்கு (வடபகுதி)
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
அச்சுவேலி

லக்ஸி கொம்மியூனிக்கேசன்
(தொலைத் தொடர்பு சேவை)
அச்சுவேலி

சூர்யா பார்மஸி
அச்சுவேலி, ஆவரங்கால்,
புத்தூர்

சாயி வீடியோ &
அச்சுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம் கார்டினர் அவர்களின்
# ... சிறப்பு மலர் 10-12-1999



Chev. Chevalier Sir
...am Abraham Gardiner
...e OBE K. St.Sylvester
...ory.

## ...துள் வாழ்வாங்கு
## ...ந்த பெருந்தகை

...நாயகனின் சொந்த
...யில் கல்வன் என்ற
...ா லும் விழாக் குழு
...செயலாளர் என்ற வகை
...ம் மலருக்கு ஆசிச்செய்தி
...தில் பெருமகிழ்ச்சி
... இறும்பூதெய்தி நிற்கின்

...ற்றர்', 'செவாலியர்',
...கிய மும்மணி முடிகளை
...ஜே சூடிய ஒரு தமிழ்
...க்கப் பெருமகன் என்ப
...க்குப் பெருமை. இதுவே
...பெருமைக்கும் புகழுக்கும்
... அவரது தேசிய, சமூக
...பக் கௌரவித்து
... அரசாங்கமே 'சேர்
...ம்கார்டினர்மாவத்தை'
...லைநகர் கொழும்பின்
...ல் அழியாச் சின்னமாகப்
...துள்ளது.

... பிறந்தமண்ணில் அவர்
... சேவைக்கு அச்சுவேலி
...யசாலையும், புனித
...மகளிர் கல்லூரியும் அவ
... கண்களாகப் பரிண
...ம்மைப் பார்க்கின்றன.
...ான்றி புகழொடு
...கஃதிலார், தோன்ற
...ான்றாமை நன்று'
...ளுவன் கூற்றுக்கு இலக்
...க் கிறிஸ்துவத்தை இவ்
...ாழ்ந்து காட்டிய மானி
...வம்.

... அன்பளிப்பிலும் தனது
...ச் சூட்டவிரும்பாத தர்ம
...நாறாவது பிறந்தவிழா
... 39 ஆவது சிரார்த்த
...யும் நன்றிப் பெருக்
...மகிழ்வுடன் நினைவு
...வரைப்போன்ற பரோப
...னை படைத்த கொடை
...ள் பலர் எம் மண்ணில்
...வண்டுமென ஆசி கூறி
...றன்.

...கொன்றார்க்கும் உய்
... வுண்டாம் உய்வில்லை
...றி கொன்ற மகர்க்கு''

...ரு. அ. ம. இராஜேந்திரம்
...லிப் பங்கு கத்தோலிக்க
... ஒன்றியச் செயலாளர்.

## தர்ம சிந்தனையின் உறைவிடமானவர்

நூற்றாண்டு விழாக்காணும் சேர் சிற்றம் பலம் ஏபிரகாம் கார்டினர் மாணிப்பாய் மேன்மைக்குரிய வைரமுத்து கார்டினரின் உத்தமோத்தம சுதன் ஆவார். அன்னாரின் முற்சந்ததியினரும் இருமுது குரவர்களும் செய்த புண்ணிய வசத்தால் தர்மசிந்தனை யின் உறைவிடமாக, சமூகத்தொண்டராக, சமயப்பற்றுள்ளவராக இறைவனால் தோற் றுவிக்கப்பட்ட ஒரு ஞானவிளக்காவார். இதற்கெடுத்துக்காட்டாக அச்சுவேலிப் பகுதி யின் சொந்தக் காணியில் அரசினர் வைத் தியசாலை புனிததெரேசா மகளிர் பாட சாலை ஆகியனவற்றைத் திரிகரண சுத்தியு டன் அமைத்தமை சான்று பகரும்

சமூகத்தொண்டராய் மிளிர்ந்த இந்த உத் தமரை நினைவு கூர்ந்தெடுக்குமிவ்விழாவா னது நன்கு பொலிவுற மலர விநாயகன் பாதக் கமலங்களை வணங்கி நல்லாசிதனை நல்கின்றேன் யானே!

அத்திமுகன் திருவருள் பெருகுக!

சிவஸ்ரீ. கு. வை. விருத்தகிரீஸ்வரக் குருக்கள்
பாலபண்டிதர் 'ஆதீன தர்மகர்த்தா'
சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
அச்சுவேலி

## அச்சுவேலி பங்கின் செய்தி

அமரர் திரு. சிற்றம்பலம் கார்டினர் அவர்களின் நினைவை நன்றிப் பெருக்கோடு நினைவு கூருகின்றோம் அவர் அச்சுவேலி சமூக வளர்ச்சிக்குச் செய்த பேருபகாரச் செயல்கள் அவரது தூரப் பார்வையையும் சமூகப் பற்றையும் எடுத்துக் காட்டுகிறது. என்றோ ஒரு நாள் அவர் விதைத்த விதைகள் இன்று பெரு விருட்சமாக அச்சுவேலி சமூகத் துக்குப் பயன் தந்துகொண்டிருக்கின்றது. இந்த வகையிலே அவர் மக்களின் நலன் கருதி. அச்சுவேலியில் வைத்தியசாலையை நிறுவி னர். மேலும் திருச்செபமாலை கன்னியர் மட வளாகம், 'அன்பகம்' புனித திரேசாள் பாடசாலை போன்றவற்றைத் தனது சொந் தச் செலவில் அன்பளிப்புச் செய்தார். இவற்றி னூடாகப் பல மக்கள் பல நன்மைகளைப் பெற்று வருகின்றனர். தொடர்ந்தும் பல மக் கள் நன்மைகள் பெறுவார்கள் என்பது நம் பிக்கை. இவ்வாறு சமூகப் பற்றுக் கொண்ட பேருபகாரியை நாம் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த் திக்கின்றோம்.

Rev. Fr. X. W. James,
Parish Priest, Atchuvely.

## சாதி, மத வேறுபாடற்ற தன்னலமில்லா சேவையாளன்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை சோ. சிற்றம்பலம் கார்டினர் அவர்களால் 1946 ஆம் ஆண்டுநிறுவப்பட்டது இன்று அன் னாரின் 39 ஆவது சிரார்த்த தினமாகும். இவரின் குடும்பம் கொழும்பை வதிவிடமாகக் கொண்டிருந்தபோதும் தனது சொந்த ஊரின் வளர்ச்சியையும்- மக்களின் அத்தியாவசியத் தேவைகளையும் மனதிற் கொண்டு ஒரு வைத் தியசாலையையும்பெண்கள் கல்விக் கூடம் ஒன் றையும் நிறுவிய பெருந்தகையாளராவார். தனது சொந்த ஊர் மக்கள் மட்டுமன்றி அய லூர் மக்களும் பயன் பெறத் தக்கவாறு கிரா மத்தின் மத்தியில்- போக்குவரத்து வசதி யுள்ள இடத்தில் வைத்தியசாலையை நிறுவி யமை அவரது சாதி, மத, வேறுபாடற்ற- தன்னலமற்ற சேவைக்கு ஓர் எடுத்துக்காட் டாகும். அவர் உருவாக்கிய வைத்தியசாலை ஸ்தாபகரின் பரந்த உள்ளத்தைப் போல பெரும் வளர்ச்சி கண்டு ஆயிரமாயிரம் மக்க ளின் நோய் தீர்க்கும் இடமாக விளங்குகிறது.

இன்று அவரது நூற்றாண்டு ஞாப கார்த்த விழாவிலே அவர் ஆரம்பித்து வைத்த பணியின் உன்னத நிலை கண்டு அவரை அர சினர் வைத்தியசாலை வைத்தியர்களும், ஊழி யர்களும் அபிவிருத்திச் சபையினரும் மனமார நினைவு கூருகிறோம்.

க. சிவசுப்பிரமணியம்
அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத்தலைவரும்-ஓய்வு பெற்றகொத்தணி அதிபரும்.

## யாழ். ஆயரின் செய்தி

அன்புச் சகோதரங்களே!

திருச்சபை வானகத் தந்தையை நோக்கி திருப்பயணம் செய்யும் இறைமக்களின் திருக் கூட்டமே இந்தத் திருப்பயணத்தில் எம்மை இனங்காண வைப்பது எமது அன்புப்பணியே. ''நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிந்து கொள்வர்'' (யோவா. 13:35) எனவே எமது அன்புப் பணி இனம், மொழி, மதம் மற்றைய சமூக வேறுபாடுகள் என்ற மனித வரையறைகளைக் கடந்தது.

எமது நினைவுகளில் நிழலாடும் செவாலி யர் சிற்றம்பலம் கார்டினர் இறையடி சேர்ந்து 49 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று அன்னாரது பிறப்பின் நூற்றாண்டை நினைவு கூருகின்றோம். எமது மண்ணின் அச்சுவேலியை தனது பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது அயராத முயற்சி யினால் வர்த்தகத்துறையில் தனித்துவமான தடம் பதித்தவர். இவரது பரந்த உள்ளமும் விரிந்த கரமும் எமது மறைவட்டத்தின் பொருளியல் முன்னேற்றத்துக்கு அரும்பெரும் உதவியாக அமைந்தது.

இறையடி சேர்ந்த செவாலியர் சிற்றம் பலம் கார்டினருக்கு இறைவனின் அளவில் லாத இரக்கம் கிறிஸ்துவில் நிறைவாழ்வை அளிக்க வேண்டுகிறேன் அன்புப் பணி தொடர வேண்டும் என ஆசிக்கிறேன்.

இறைபணியில் உங்கள் ஆயர்
பேரருள்திரு.தோமஸ்சவுந்தரநாயகம்யாழ். ஆயர்

## மக்கள் சேவை புரிந்த மகேசன்

தன்னை வெளிக் காட்டிக் கொள்ளாது தனது சொத்தையும் உழைப்பையும் தனது கிராமத்துக்காக வழங்கிய வள்ளலுக்கு இன்று நூறாண்டு நினைவு தினம் அக்கிராமத்து மக்களால் கொண்டாடப்படுகின்றது அவரது உருவத்தை சிலையாக வடித்து நிறுத்தும் நிகழ்வும் அவரால் அவரது மூன்று ஏக்கர் நிலத்தில் அவரது செலவால் வறிய மக்களுக் காக உருவாக்கப்பட்ட அச்சுவேலி கிராம வைத்தியசாலையில் அமைவதே மிகப் பொருத்தமானது. புனித தெரேசாள் மகளிர் கல்லூரியை இங்கு அமைத்து பெண் கல்விக்கு அக்காலத்தில் முக்கியத்துவம் கொடுத்த பெருந்தகை சேர் செவாலியர் சிற்றம்பலம் கார்டினர் அவர்களே. எவ்விடத்தும் தனது பெயரைப் பொறிக்காது அடக்கத்துடன் மக் கள் சேவை புரிந்து 'மகேசன்' நிலையில் இருக் கும் அவர் யேசு பெருமான் போதித்த சேவை யைச் செயலாகக் காட்டியதால்- இன்று அகில இலங்கையிலும் இன, மத, மொழி பேதமற்ற முறையில் சகலரது மனதிலும் நினைவில் நிறைந்துள்ளார். க. இராசதுரை

இந்நாள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர்

## A MESSAGE FROM HIS BLOOD RELATION

During this period of Commemoration of 40th Death Anniversary and the celebration of Centenary Birth day, many of Atchunacarans identify themselves with Sir Chittampalam Abraham Gardiner, descendents of Thillaiyampalam Vidanai, Narasingam Mudaliyar, Sittampalam Mudaliyar, (Mr George), and Kalveedu people, Udaiyar people and some hindus from Pallam thoddam (Mr Gunanayagam) and Payiththolai (Mr Shanmugalingam) are the relatives in Atchuvely Narasinga Mudaliyar group of people fall in to three categories; Avurar group, Vaithipillai group and the descendent of two sons of Narasinga Mudaliyar (Mr Julian) Thillaiyampalam Vidanai was from Manipay. He was a descendent of the king Pararajasegaran and he married Seema Udaiyar's daughter Varonica in Atchuvely – Gardiner's father was from Manipay and he was a brother of Swami Gnanapiragasar mothar, Annamuttu. Sir Gardiner was also related to all Sir title holders in Manipay.

He was born on 06-01-1899 at Mudaliyar Walavu, Inner Square. Atchunagar Atchuvely.

May his soul rest in peace.

S. C. EMMANUEL B. Sc.(Cey.)

## அரசஅதிபரின் செய்தி

சேர் சிற்றம்பலம் கார்டினர் நூற் றாண்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப் புவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். 6-1-1899 இல் பிறந்து 10-12-1960 இல் மறைந்தாலும் தனது சீவிய காலத்தில் அவர் செய்த சாதனைகள் பல. அவரை சமுதாயம் உயர் நிலைக்கு ஏற்றியது மிகையாகாது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் மைத்து னரான அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

நாட்டில் பலதொழில்ஸ்தாபனங்கள் உரு வாவதற்கும் பல நூற்றுக்கணக்கான மக் களின் தொழில் வாய்ப்புக்கும் காரணமாக இருந்த பெருமை இவரைச் சாரும்.

அச்சுவேலி வைத்தியசாலை பாடசாலை என்பனவும் மக்களுக்குகாணிகளும்வழங்கிவீடு களும் கட்டிக்கொடுத்துள்ளார் என அறிகின் றேன். இங்கிலாந்துமன்னரிடமிருந்து 'சேர்' பட்டத்தையும்கத்தோலிக்க மதபீடஅதி உயர் விருதான 'செவாலியர்'பட்டத்தையும்பெற்ற இவர் இலங்கையில் முன்பு இருந்த செனற் சபையிலும் நீண்டகால அங்கத்தவராக இருந்த பெருமை இவருக்கு உண்டு.

செயற்கரிய சேவை செய்த இவரது நினைவு மக்களின் மனங்களில் எப்போதும் இருக்க வேண்டியது அவசியமாகும். இவரது உருவச்சிலை ஒன்றை நிறுவி அவரது நினை வாக நூற்றாண்டு மலர் சிறப்புற வெளி வர எனது வாழ்த்துக்கள்.

க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர்.
யாழ். மாவட்டம்.

## மண்ணையும் மக்களையும் மெய்யாகவே நேசித்தவர்

வளங்கள் பலநிறைந்த அச்சுவேலி மண் ணில் 'வாழ்வாங்கு வாழ்ந்த மதிப்பிற்குரிய சிற்றம்பலம் ஏபிரகாம் கார்டினர் அவர்க ளுக்கு நூற்றாண்டு விழா எடுத்து மகிழும் மண்ணின் மக்களோடு நானும் மகிழ்ந்து நிற்கின்றேன். இப் பெரு மகனார் தான் பிறந்த மண்ணையும் மக்களையும் மெய்யா கவே நேசித்தவர். அன்பு எப்பொழுதும் கொடுக்கும் என்று சொல்லுவார்கள், மக்க ளின் முன்னேற்றத்திற்காக தேவைகளுக் காக தன்னை தனது ஆற்றல்களை. செல் வங்களை, நிலபுலன்களை தாமாகவே அர்ப் பணித்தவர் என்று அறியவரும்போது மீட்பர் இயேசுவின் பணித் தொடர்ச்சியே இது வெனக் காண்கின்றேன். அருட் பணியாளர் ஜி ரி. பாலசுந்தரம் அ.ம.தி. அவர்கள் அச்சு வேலியில் பங்குத்தந்தையாக இருந்த பொழுது கார்டினர் அவர்களின் விருப்பத்தி னாலும்இடைவிடாத தூண்டுதலாலும் தான் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினர் அச்சு வேலியில் கால் பதித்தனர்.

அருட்சகோதரி ஸ்ரனிஸ்லாஸ் மேரி
முன்னாள் அதிபர்

## மனித நேயம் நிறைந்தவர்

இப்பெருமகன் தாம் பிறந்தமண்ணையும் ஊர்மக்களையும் மிகவும் நேசித்தவர். தமது அயராத உழைப்பாலும் கடின முயற்சியா லும் புகழ்பெற்ற தொழில் அதிபராகவும் பிரபல வியாபார நிறுவனங்களை நிறுவியாழ் மக்கள் அங்கு தொழில் செய்யும் வாய்ப்பு களைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார்.

எமது திருச்சபை இவரின் சிறந்த சேவை களைப்பாராட்டி புனித சில்வேஸ்ரரின் செவா லியர் பட்டமும், புனித சிறகோரியார் செவா லியார்பட்டமும்அளித்து மகிமைப்படுத்தியது. மனித நேயம் நிறைந்தவராய், இறைப்பற்றும் விசுவாசமும் செறிந்தவராய், பேருபகாரி யும் கொடை வள்ளலுமாக போற்றப்பட்டு வந்த இவர் சடுதியாகதமது 60-ம் வயதிலேயே இறைபதம் அடைந்தார்.

அன்னாருக்கு நன்றி விழா எடுத்து அவ ரது அரும்பெரும் செயல்களைப் பெருவகை யுடனும் நன்றியுடனும் நினைவு கூருவது சாலவும் பொருத்தமானதாகும். இவர் இறை சந்நிதியில் நிலையான பேரின்பம் பெறுவா ராக.

அதிவண. J. P. E செல்வராஜா
குரு முதல்வர்


...டினர் நூற்றாண்டு விழா மலருக்கு வாழ்த்துக் கூறுவோர்:

...யோ & ஸ்ரூடியோ
அச்சுவேலி

டயானி மினி சினிமா
அச்சுவேலி

தங்காஸ் ரேடிங்
அச்சுவேலி

கண்டி ஸ்ரோர் &
கொம்மியூனிக்கேசன் அச்சுவேலி
T. P. 070 – 212534 I. D D. 0094 – 70-212534


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

வீரபத்திரர் வீதி. கல்வியங்காடு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துரைராஜசிங்கம் டினேஸ்காந் என்பவரது விசேட அ. அ. இல. (0902011322), பாடசாலை அடையாள அட்டையும் திருநெல்வேலிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். (71669)

நல்லதம்பி சிவமூர்த்தி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள், [540541566X] அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சந்நிதி றோட், தம்பாளை, அச்சுவேலி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (71651)

கட்டப்பிராயைச் சேர்ந்த வேலும்மயிலும் ஜெயவதனி என்பவரது தேசிய அ. அட்டையும் [787633650V], வயாவிளான் தெற்கு வயாவிளான் என்னும் முகவரியை உடைய விசேட அ அட்டையும் (0907012020) இருபாலை சந்திக்கும் கட்டப்பிராக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோல்டன் டக், இருபாலைச் சந்தி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (71662)

56/13 ஆத்திசூடி வீதி. கந்தர்மடம் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் சின்னத்துரை ராஜ்குமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டை 05-12-99 அன்று கொட்டடி நாவாந்துறைக்கும் கந்தர் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (71656)

கலைவாணி மில் ஒழுங்கை. கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீகாந்தன் சோபனா ஆகிய எனது தேசிய அ. அட்டை, விசேட அ. அட்டை என்பன 29-11-99 அன்று திருநெல்வேலி சந்திக்கும் விவசாயப் பண்ணைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நியூ துர்க்கா பேக்கறி பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். [71666]

### விற்பனைக்கு

24 சிறிபி. எம் சீ. லொறி கியர் பொக்ஸும் கதலி, இதரை வாழைக்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தி. இர சரேத்தினம் "விஜிதா அரிசி ஆலை வளவு" தாவடி தெற்கு, கொக்குவில். (71661)

### வீடு விற்பனைக்கு

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வீடும் [05 அறைகள் Terrazzo தளமிடப்பட்டது]. நீர்த்தாங்கியுடன் கூடியதுமான 16 பரப்புக்காணியும வீடும் முழுமையாக அல்லது வீடும் 6 பரப்புக்காணி பகுதியாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ஸ்ரீ. கதிர்காமநாதன், ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவு. யாழ். பல்கலைக்கழகம் அல்லது கேணியடி ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை. (71378)

### மணப்பெண்கள் தேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன்களுக்கு படித்த மணப்பெண்கள் தேவை. ராசாத்தி அபிராமி திருமண சேவை ஆடியபாதம் சந்தை வீதி, 1ஆம் ஒழுங்கை, கொக்குவில். (71629)

### இறைச்சிக் கோழி

புறோயிலர், விறாத்துக் குஞ்சு, இறைச்சிக்கேற்ற பேட்டுக்கோழி என்பன சுத்தம் செய்து கொடுக்கப்படும். (பாதிக்கோழி உட்பட) இல. 16, றக்கா லேன், சுண்டுக்குளி. [சி/10137]

### விற்பனையாகின்றது

99, O/L ஆங்கில வினாப்பத்திரம் விற்பனையாகின்றது. நகர் புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியர் K. முருகன் அக்கடமி லேன், நல்லூர். (71668)

### ENGLISH CLASSES

Improve your skills and knowledge in English General English G C, E. (O/L) and TOEFL Done, Taught By American Graduate Contact: K Umasuthan, 112, Palaly Road, Near Campus Junction, All translations from Tamil To English. One or Many Pages.

(71582)


# வன்னித் தளங்களுக்கு ரத்வத்தை நேரில் விஜயம்

கொழும்பு, டிசெ. 10

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த முப்படைத் தளபதிகள் சகிதம் நேற்று முன்தினம் வன்னிப் பகுதியிலுள்ள படைத் தளங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் அதிகாரிகளுடன் பேச்சும் நடத்தினார்.

வன்னியில் தாம் சில பின்னடைவுகளைக் கண்டுள்ள போதும், விடுதலைப் புலிகள் மேலும் நிலப்பகுதிகளைக் கைப்பற்ற அனுமதிக்கப் போவதில்லை என்று பெரும்பாலான படையினர் ஜெனரல் ரத்வத்தவுக்கு உறுதி அளித்ததாக அரசுத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ9-)

# திருட்டுகள் அதிகரிப்பதால் இரவில் மக்கள் அச்சத்துடன்

திருநெல்வேலி, டிசெ. 10

கொக்குவில் மேற்குப் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக திருடர்களின் அட்டகாசம் மிகவும் அதிகரித்துள்ளதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குவில் மேற்கு ஐயனார் கோயிலடிப் பகுதியில் இரவு வேளையில் திருடர்கள் கோஷ்டியொன்று பதுங்கியிருந்த வேளையில் அப்பகுதி இளைஞர்கள் ஒன்று திரண்டு அவர்களைப்பிடிக்க எத்தனித்தவேளை அவர்கள் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டிலிருந்த யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடன் ஒருவன் அறுத்துக் கொண்டு போக முயற்சித்த வேளை கூக்குரலிட்டு சத்தம் போட்டதை அடுத்து திருட்டு முயற்சியைக் கைவிட்டு திருடன் தப்பி ஓடிவிட்டான்.

கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலைக்கு அண்மையிலுள்ள அரசாங்க வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றும் பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் புகுந்த திருடர்கள் அவரது சைக்கிளைத் திருடிக் கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை —

இப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் ரொக்கப்பணம் மற்றும் பொருள்களை திருடிச் சென்றுள்ளனர். வீடியோ கடை ஒன்றும் உடைக்கப்பட்டு அங்கிருந்த வானொலிப் பெட்டி மற்றும் பல பொருள்களும் திருடப்பட்டுள்ளன.

இதனை அடுத்து இப்பகுதி மக்கள் இரவுப் பொழுதை அச்சத்துடன் கழித்து வருகின்றனர்.

(ஐ-135-15-17)


பண்டத்தரிப்பு

## பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

07 12-99 ஆம் திகதிய விளம்பரத் திருத்தம்

கிளை மேற்பார்வையாளர்

சம்பள இலக்கம் 207/13

விண்ணப்ப முடிவு திகதி: 27-12-1999

[சி/10162]

## தவறிவிட்டது சன்மானம் வழங்கப்படும்

எமது சங்கப் படகின் திருத்த வேலைக்கு எடுத்து வரப்பட்ட பொடியுடன் கூடிய நோசில் மூன்று துண்டும், பழைய செயின் ஒன்றும் சொப்பிங் பாக்கில் சடந்த திங்கட்கிழமை (06—12—99) பிற்பகல் 5 30 மணிக்கு குறிகாட்டுவான் பஸ்ஸில் இருந்து இறங்கி, யாழ். பஸ் நிலையத்தில் தவறுதலாக கைவிடப்பட்டது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து இதனைத் 'திருப்பதி மருந்தகம்' யாழ். ஆஸ்பத்திரி முன்பாக அல்லது சங்கத்தில் ஒப்படைக்கவும். தகுந்த வெகுமதி வழங்கப்படும்.

புங்குடுதீவு - நயினதீவு ப. நோ. கூ. சங்கம்.

[சி10163]


# யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு வாக்களிப்பு நிலையம் - புத்தளம்

யாழ்ப்பாணம், டிசெ. 10

யாழ். மாவட்ட முஸ்லிம் வாக்காளர்களுக்கு புத்தளம் மாவட்டத்தில் விசேட வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்படும்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வசித்து வரும் முஸ்லிம் வாக்காளர்களுக்கு அவர்கள் வசித்து வரும் இடங்களில் வாக்களிப்பதற்கு வசதியாக விசேட வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

2 ஆயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் வாக்காளர்கள் புத்தளம் மாவட்டத்தில் வசித்து வருகின்றனர்.

யாழ். மாவட்ட முஸ்லிம் வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகள் யாழ். தேர்தல் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு புத்தளம் மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஐ-11)

## மின் தடை

இலங்கை மின்சார சபையினால் மட்டுவிலில் வைக்கப்பட்டுள்ள ஜெனரேற்றர் கடந்த மூன்று தினங்களாக பழுதடைந்துள்ளது இதனால் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இதனால்பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## மனித உரிமைகள் தின நிகழ்ச்சி

மனித உரிமைகள் தினத்தை ஒட்டி வண்ணார்பண்ணை வழக்கம்பரை அம்மன் ஆலய முன்றலில் இன்று காலை 9 மணிக்கு ஈ.பி.டி.பி அமைப்பின் ஏற்பாட்டில் விசேட நிகழ்ச்சி இடம்பெறும்.

அந்த அமைப்பின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளர் ஸ்ரீ என். திரிலோகநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பலர் கலந்து கொள்வர். (ஐ)


## றோயல் அக்கடமி

சாவகச்சேரி

**A/L 2000**

★ கிரயக்கணக்கீடு

★ கம்பனி

B. முகுந்தன்

ஆரம்பம்: 13-12-99

(71683)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்

07 — 01 — 1977



மறைவு:

10 — 09 — 1999

**குணசிங்கம் ஞானேந்திரன்**

(குட்டிக் கண்ணன்)

(உரிமையாளர் கோபிகா ஆடையகம்)

நீல வானிலே — நீ
நித்தம் தவழ்கின்ற
நீல மேக கண்ணனே!
நீ சொட்டுத் தேனைப் போல்
சொல்லும் வார்த்தைகள்.
பட்டுப் பூவைப்போல் — நீ
பார்க்கும் பார்வைகள்
சொர்க்கம் தேடிச் செல்லட்டும்
உன் ஆசை வெள்ளங்கள்
அங்கெல்லாம் பொங்கட்டும் — உன்
அன்பு நினைவுகள்

3 மாத காலம் சென்றாலும் உன் நினைவோடு காலமெல்லாம் என் உயிர் பாடை ஏறும்வரை உன் ஆத்மா சாந்தியடைய தினம் தினம் ஆண்டவனை வேண்டுகின்றேன்.

காப்புறுதி முகவர் யோகன்.

அல்வாய். (71672)

## யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்

பழைய மாணவர் சங்கம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம் - 1999

காலம்: 12-12-99 (ஞாயிறு) மாலை 3 00 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர். உதவிச் செயலாளர்.

[71673]

தமிழுலகில் கவிதைத் தடம்பதித்த மதுரகவியை

## வாழ்த்துகின்றோம்

மதுரகவி

**காரை. எம். பி. அருளானந்தன்**

எங்கள் கல்லூரியின் முன்னாள் மாணவரும், ஆசிரியருமான மதுரகவி காரை. எம் பி. அருளானந்தன் அவர்கள் உலகக் கவிதைப்போட்டியில் உன்னதமாய் முதலாம் இடத்தைப் பெற்று ஈழத்திரு மண்ணுக்கும் தமிழ் அன்னைக்கும் ஈடிணையற்ற புகழினைச் சேர்த்த மதுரகவியை மனநிறைவோடு வாழ்த்துகின்றேன்.

இயக்குநர்

பட்டப்படிப்புகள் கல்லூரி,

யாழ்ப்பாணம்.

(71674)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோர் விடயம் குறித்து விசாரிக்க ஆணைக்குழு அமைக்குக!

## சர்வதேச மன்னிப்புச் சபை கோருகின்றது

கொழும்பு, டிசெ 10

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் வடக்கு – கிழக்கு பகுதிகளில் புலிகளுக்கு எதிராக இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு பக்கச் சார்பற்ற விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்.

சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கண்டவாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரி உள்ளது.

1996 ஆம் ஆண்டு யாழ். குடாநாட்டில் காணாமல் போன ஐந்நூற்றுக்கும் அதிகமானவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும்—

அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியவில்லை என்றும்—

பாதுகாப்பு அமைச்சு காணாமல் போனவர்களின் பெற்றோருக்கு அண்மையில் அறிவித்திருந்தது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு நடத்திய விசாரணைகளின் முடிவுகள் முழுமையாக வெளியிடப்பட வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை கேட்டுள்ளது.

(உ-6)

## வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்

வலி.கிழக்கு. டிசெ. 10

காலாவதியான பாவனைப் பொருள்கள், மருந்து வகைகள் மற்றும் சுகாதார முறைப்படி அனுமதி பெறப்படாமல் உற்பத்தி செய்யப்படும் ஜூஸ் வகைகள் போன்றவற்றை வர்த்தகர்கள் விற்பனைசெய்யக்கூடாது என நீர்வேலிப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே. ரி. தயாளன் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவது கண்டு பிடிக்கப்பட்டதைத்தொடர்ந்து அவர் இந்த அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

[க-180]

## பயிற்சி நெறி

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஐ. ஐ. எஸ். கணிப் பொறி நிறுவனத்தினரின் அனுசரணையுடன்யாழ் பல்கலைக் கழக போதனைசாரா ஊழியருக்கான கணிப் பொறி பராமரிப்பு மற்றும் பிரயோகம் பற்றிய அடிப்படை பயிற்சி நெறி ஒன்றினை வழங்கி வருகின்றது. (க)

## மீன்பிடித் தொழில்

தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையைத் தொடர்ந்து கோப்பாய், மட்டுவில் கடல் நீர் ஏரிப் பகுதிகளில் மீன் பிடித் தொழில் ஆரம்பமாகி உள்ளது.

இந்த ஏரிப் பகுதிகளில் மீனவர்கள் கைவலை வீசி ஒட்டி முரல், சூடை போன்ற மீனினங்களைப் பிடித்து விற்பனைசெய்து வருகின்றனர்

# காங்கேசனில் 26 கைதிகள்

யாழ்ப்பாணம், டிசெ 10

காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் தற்பொழுது 8 பெண்கள் உட்பட 26 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அங்கு விஜயம் செய்து கைதிகளைப் பார்வையிட்டுத் திரும்பிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்தார்.

ஏற்கனவே அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளோருடன் கடந்த செவ்வாயில் அனுப்பி வைக்கப்பட்ட மற்றைய இருவரின் விவரம் வருமாறு:-

★ நடராசா தயாளன் [வயது 18] கில்னர் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி.

★ பரமானந்தன் ஸ்ரீராகவன் [வயது 19] — தாளையடி லேன், திருநெல்வேலி.

[உ-10-9]


# பல்லாண்டு வாழ்க!

## இன்று தமது 80 ஆவது அகவையில்

காலடி பதிக்கும் பிரபல சட்டத்தரணியும்
சமாதான நீதிவானும் சபைத் தொண்டருமாகிய

## உயர்திரு. எஸ். கனகரட்ணம்

அவர்களை மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து பணிபுரிய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

எண்பதாவது அகவை தனிலே இன்று
எல்லோரும் வாழ்த்த அடி எடுத்து வைக்கும்
பண்பு நிறை பெரியோய்!
பேரறிஞா! 'நீதி
பதி'யாகி அறங்காத்த தருமத் தேவா!
எண்பதிலும் இளமைகுன்றா மிடுக்குக் கொண்டு
எல்லோர்க்கும் நன்மையே செய்ய நினைக்கும் செல்வா!
மண்புகழ;
உடல் உளமும் சிறக்க; நாங்கள்
மனமார வாழ்த்துகின்றோம்!
வாழ்க! ஐயா!!

- யாழ். திவ்ய ஜீவன சங்கத்தினர்.

(71606)



# நெஞ்சை விட்டகலா

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 — 12 — 1979



மறைவு 10 — 12 — 1998

## செல்வி ஜெயந்தி வைரவநாதன்

காலம் ஓடி விரையலாம்; எனினும்
இலட்சிய நோக்கும் இதய உறுதியும்
அன்பும் பாசமும் எம்மை விட்டகலுமோ?
அரசகேசரி விநாயகர் பாதங்களில்
சிவந்ததோர் தாமரையாய்த் திகழ்க!
அழியா உனது நினைவுகள் யாவுமே.

என்றும் துயருறும்

பாசமிகு அப்பா, அம்மா, சகோதரிகள்,
அன்புத் தம்பி, உற்றார், உறவினர்கள்.

நீர்வேலி தெற்கு,
கரந்தன் சந்தி.

(71642)



# ஞானசெல்வ விநாயகர் தேவஸ்தானம்

புதுவீதி, கொய்யாத்தோட்டம்.

# கும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழா

▶▶▶▶▶▶▶▶▶▶▶▶◀◀◀◀◀◀◀◀◀◀◀◀

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் கொய்யாத்தோட்டம் என்னும் புண்ணியபதியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருவருள்மிகு ஸ்ரீ ஞான செல்வவிநாயகர் தேவஸ்தான இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாச் சிறப்பு மலராகிய கும்பாபிஷேக மலர் வெளியீட்டுவிழா நிகழும் பிரமாதி வருடம் கார்த்திகை மாதம் 25 ஆம் நாள் 11 — 12 — 1999 சனிக்கிழமை நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது அன்பர்கள் அனைவரையும் விழாவில் கலந்து எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர்:— திரு. கோ. தியாகராசா
(தலைவர், ஞானசெல்வ விநாயகர் தேவஸ்தான பரிபாலனசபை கொய்யாத்தோட்டம், கௌரவ செயலாளர் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை)

பிரதம விருந்தினர்:— பேராசிரியர், கலாநிதி பிரம்மஸ்ரீ ப. கோபாலகிருஸ்ணஐயர்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

சிறப்புவிருந்தினர்:— திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

காலம்:- 11 - 12 - 1999 சனிக்கிழமை காலை 9.00 மணி

இடம்:- ஸ்ரீ ஞானசெல்வ விநாயகர் ஆலய மண்டபம்
புதுவீதி, கொய்யாத்தோட்டம்.

## நிகழ்ச்சி நிரல்

▶ விசேட அபிஷேக ஆராதனை, காலை 7.00 மணி
▶ மங்கள விளக்கேற்றல்.
▶ வேதபாராயணம்.
▶ திருமுறைப் பாராயணம்.
▶ வரவேற்புரை: திரு. கு. இராசசிங்கம் செயலாளர், ஞானசெல்வவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை, கொய்யாத்தோட்டம், மாவட்ட நீதிமன்றம், யாழ்.
▶ தலைவர் உரை
▶ ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்.
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
தர்மசாஸ்தா குருகுல அதிபர், இணுவில்.
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர், துர்க்கை அம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பழை.
செஞ்சொற்கொண்டல் திரு. ஆறு. திருமுருகன் (B A)
ஆசிரியர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை.
▶ பிரதம விருந்தினர் உரை.
▶ சிறப்பு விருந்தினர் உரை.
▶ வெளியீட்டுரை: சிவஸ்ரீ பால சர்வேஸ்வரக் குருக்கள் (B. A. Hons)
[L D. .O] ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, கந்தரோடை.
▶ நூல் அறிமுக உரை: பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா (B A Hons)
விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

## கும்பாபிஷேக மலர் வெளியீட்டு வைபவம்

★ முதற் பிரதி பெறுபவர்: திரு. து. வைத்திலிங்கம் மேலதிக அரசாங்கஅதிபர், யாழ்
★ மலராசிரியர் பதிலுரை: பிரம்மஸ்ரீ ச. பத்மநாப சர்மா நல்லூர்
★ நன்றியுரை: ஆ. சாந்தலிங்கம் பொருளாளர் ஷெ பரிபாலன சபை, தலைவர், கொழும்புத்துறை வர்த்தக சங்கம்.

இங்ஙனம்
தேவஸ்தான பரிபாலன சபை.

விளம்பர அன்பளிப்பு:

திரு. ந. யோகநாதன் - வலந்தலை, காரைநகர்
திரு. க. சோமசேகரம் - மகாராணி ரெக்ஸ், யாழ்ப்பாணம்
த. குமாரசாமி ரெக்ஸ்ரயில் - 44/42 பெரியகடை, யாழ்ப்பாணம்
திரு. ப. அமிர்தலிங்கம் - கருங்காலி, காரைநகர்

[71608]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

On your Mark .........
ஆயத்தம் .........
மலிவு விற்பனை எப்போது ?
அருண்ஸ்
ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்
கஸ்தூரியார் விதி, யாழ்ப்பாணம்.
(சி/10360)

## தீவக லயன்ஸ் கழகத்தின் பாராட்டுக்கள்

எமது லயன்ஸ் கழகத்தின் முதலாம் உபதலைவர்
லயன் வைத்திய கலாநிதி
**கந்தையா இராசரெத்தினம்**
அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மற்றும்
அகில இலங்கை சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்ற
லயன் வைத்திய கலாநிதி
**எஸ். எஸ். அருளானந்தம்**
(மாவட்டத் தலைவர்)
லயன் **எஸ். பத்மநாதன்**
(பிராந்திய ஆலோசகர்)
லயன் **கே. வி. முத்துக்குமாரசாமி**
(மாவட்ட இணைப்பாளர்)
லயன் வைத்திய கலாநிதி
**வி. தியாகராசா**
(வலயத் தலைவர்)
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தீவக லயன்ஸ் கழகம்
(71660)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கதிர்காமத்தம்பி சிவநாதன்**
[உரிமையாளர், ராணி பேக்கரி, ஓராங்கட்டைச் சந்தி, பருத்தித்துறை.]

மலர்வு 09-12-1944
உதிர்வு 01-12-1997

ஆண்டு இரண்டு சென்றது
நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஆனாலும்.
உம் நினைவு தரும் ஆத்ம சுகத்தில்
என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்
அப்பாவே!

நினைவகலாத
மனைவி. பிள்ளைகள்.

தேவரன்,
புலோலி தெற்கு,
புலோலி.
[சி/10159]

## கண்ணிவெடி கருத்தரங்கு

சண்டிலிப்பாய் டிசெ 10

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்ட பிரிவின் கண்ணிவெடி விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கு பிரிவில் மல்லாகம் சந்தை மைதானத்திலும் அளவெட்டி சந்தை மைதானத்திலும் எதிர்வரும் 11 ஆம்திகதி சனிக்கிழமை முற்பகல் கண்ணிவெடி, மிதிவெடி ஆகியன பற்றிய கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மல்லாகம் சந்தை மைதானத்தில் அன்றைய தினம் காலை 9 மணிக்கும் —

அளவெட்டி சந்தை மைதானத்தில் முற்பகல் 11 மணிக்கும் இக் கருத்தரங்கு நடைபெறும் என்றும் —

இப்பகுதி பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு பயன் பெற வேண்டும் என்றும் சமூகமட்டத்திலான மிதி வெடி, கண்ணிவெடி செயல் திட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஐ-135)

## புதிய ஆசிரியர் சங்கம்

வலி. கிழக்கு, டிசெ 10

வடக்கு - கிழக்கு ஆசிரியர் சங்கம் என்னும் பெயரில் ஆசிரியர் சங்கம் ஒன்று கடந்த 2 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தின் தலைவராக மு பிரபாகர், செயலாளராக ம.மகாகேதீஸ்வரன்பொருளாளராக ம. சிவசுப்பிரமணியம் ஆகியோர் உட்பட 14 பேர் கொண்ட நிர்வாகக்குழுஉறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ-180)

## நீரிழிவுபரிசோதனை

சண்டிலிப்பாய், டிசெ. 10

சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகத்தில் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதைக் கண்டறிவதற்கான இலவச சலப் பரிசோதனை நடைபெற்று வருகின்றது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரின் அனுசரணையுடன் கடந்த வாரம் தொடக்கம் இந்த இலவச சலப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டு வருவதாக மேற்படி மருந்தக பொறுப்பதிகாரி டாக்டர் எம். சந்திரசேகரம் தெரிவித்தார்.

(ஐ-135)

## மிதி வெடியில் மாடு சிக்கியது

வலி கிழக்கு, டிசெ 10

கோண்டாவில் பகுதியில் தோட்டக் காணி ஒன்றினுள் புல் மேய்ந்து கொண்டிருந்த பசுமாடு ஒன்று மிதி வெடியில் சிக்கி இருகால்களை இழந்துள்ளது.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்துரை குலேந்திரராஜா என்பவரது பசுமாடே கடந்த புதன்கிழமை மிதி வெடியில் காலை இழந்தது அண்மைக்காலமாக கால் நடைகள் மிதி வெடிகளில் சிக்கி கால்கள் இழக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. (ஐ-180)

தேவை
அனுபவமுள்ள
'மெஷின் மைன்டர்'
தேவை.
திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்
நேரில் சமுகம் தரவும்.
அபிராமி அச்சகம்
சம்பியன் லேன்,
கொக்குவில்.
(71653)

## கல்வி அலுவலகத்துக்கு ஜெனரேட்டர்

நெடுந்தீவு, டிசெ. 10


தீவகக் கல்வி வலயத்திற்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான 5 கே. வி. வலுக் கொண்ட ஜெனரேட்டர் ஒன்று வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயர் சேவையை மேற்கொண்டு வருகை தந்த வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ததைத் தொடர்ந்து இந்த ஜெனரேட்டர் கொள்வனவு செய்யப்பட்டது. [ஐ-111]

யாழ். குடாநாட்டு மக்களின் நன்மை கருதி
நவீன சத்திரசிகிச்சை வசதிகளுடன்
YARL HOSPITAL
★ காது, மூக்கு, தொண்டை
★ கண்
★ பொது
★ பல்
] சத்திர சிகிச்சைகளும் நிபுணத்துவ ஆலோசனைகளும்
★ தோல் வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள் ஆலோசனையும் சிகிச்சையும்
★ WARD வசதி மற்றும் ஆய்வுகூட வசதிகள்
★ MBBS வைத்தியரின் இரவு — பகல் வெளி நோயாளர் பிரிவு சிகிச்சை
★ பெண்ணோயியல் (V.O.G) மற்றும் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள், மகப் பேற்று அறுவைச் சிகிச்சைகள்
யாழ் வைத்தியசாலை
(ஆலடிச் சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில்)
284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[சி/10161]

## 60 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகம் 08 — 07 — 1929



விண்ணகம் 10 — 10 — 1999

**அமரர் சுப்பிரமணியம் கந்தசாமி**

அன்புநிகர் தந்தையே!
ஈடுகட்ட முடியாத உன் இலட்சியங்கள்
ஈடு சொல்ல முடியாத உன் அன்புப் பிணைப்புகள்
பாரினிலே நீ சுமந்த நனவுகளை
பார்க்க முடியாமல் கனவாக்கினாய்!
நீ தகனமாகவில்லை ஜனனமாகினாய் — உன்
ஜனனத்தில் எம் மௌன ஓலம் காதில் விழும்
அதில் வார்த்தை இல்லா நன்றி தெரியும்!

அன்பிற்கினிய அருமைத் தந்தையே!
நன்றிக்கடன் தீர்க்க நாவிலே மொழியில்லை
அன்புப் பிணைப்பில் ஆனந்த ஊஞ்சலில்
ஆடி மகிழ்ந்து நாமிருந்தோம்.
நின்றும் நடந்தும் நீண்ட பாசம் வளர்த்தோம்
கன்றும் தாயும் போல் கண்மூடித்துயின்றோம்
நேசம், பாசம் எல்லாம் நின்று கைதட்டிவிட
இன்று எம் விழிகள் இருண்டு கடலாகின்றதே

அர்ச்சனை மலர்கள்

அன்னையும் தந்தையுமாய்
ஆளாக்கி வைத்தாய் — உன்
இலட்சியம் தீரும் முன்
ஈடில்லாத் துயரம் தந்தாய்

மௌனத்தின் ஓலங்கள் — உன்
காதில் விழுந்திருந்தும்
கண் காணாமல் நீயும்
கலங்க வைக்கிறாய் — ஆயினும்

தண்ணீர் வளர்த்த பயிர் நாங்கள்
தரணியில் சாய்வதில்லை
உன் கனவுக்கு அர்ச்சனை
மலர் தூவி வழிநடப்போம்

கல் கரைந்த நேரம்

உறுதியான உள்ளம் கொண்ட உத்தமனே!
உலகில் நாம் துடிக்க உன் உள்ளம் ஏன் கரைந்தது?
கல் கூட கரையுமா? என கலங்க வைத்தாய்
இது காலன் பறிப்பல்ல; கல் கரைந்த நேரம்

எமது தந்தை அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

பலாலி றோட்.
திருநெல்வேலி.
(71663)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்) கொண்டிருந்த சேனையூரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தாக்குதலில் சிக்கிக் காயமடைந்த நிலையில் மூதூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பள்ளிக்குடியிருப்பில் இருந்து மீன் வியாபாரி போன்று மீன்பெட்டிக்குள் ரி 56 ரக துப்பாக்கியை எடுத்து வந்த நான்கு நபர்களே இத்தாக்குதலை நடத்தினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-4)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**10-12-1999**



திருமதி

## ஆறுமுகம் விசாலாட்சி

தோற்றம்: 05 - 01 - 1917 மறைவு: 10 - 11 - 1999

அன்போடும் பண்போடும் எம்மை
பாங்காய் வளர்த்தீர்
விட்டகலா பாசத்தால் வாடுகின்றோம்
உம் நினைவால்
எம் அன்பு அன்னையே உம்
ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!!

உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

86 A, சிவன் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். (71692)

# வேலணையில் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி

வேலணை, டிசெ. 10

வேலணை பிரதேச சபைக்கு 1999 ஆம் ஆண்டுக்குரிய விசேட மூலதன நிதியாக சுமார் ஒன்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் ந கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. என் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் ஜனாதிபதியின் பணிப்பின் பேரிலேயே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் இந்நிதியிலிருந்து பிரசேத சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் விபரம் வருமாறு:

வேலணை ஐக்கிய உதயமால் சனசமூக நிலையப் புனரமைப்பு. வேலணை ஸ்ரீ மீனாட்சி அம்மன் சனசமூக நிலையப் புனரமைப்பு. புங்குடுதீவு நசரெத் சனசமூக நிலையப் புனரமைப்பும் தளபாடம் வழங்கலும், புங்குடுதீவு மடத்து வெளி சனசமூக நிலையப் புனரமைப்பு, சரவணை தொல்காப்பியர் சனசமூக நிலையப் புனரமைப்பும் தளபாடம் வழங்கலும், நயினாதீவு அம்பிகா சனசமூக நிலையப் புனரமைப்பும் தளபாடம் வழங்கலும், நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய அன்னதான சபை வளாகத்தினுள் குடிதண்ணீர் கிணறு அமைத்தல், வேலணை ஸ்ரீ முருகன் சனசமூக நிலையப் புனரமைப்பு, வேலணை பிரதேச சபைக்கு பவுசர் தரிப்பிடம் அமைத்தல்.

(ஐ-167)

## மலசலகூடம் அமைப்பு

சண்டிலிப்பாய், டிசெ 10

கொக்குவில் மேற்கு சி. சி. ரி. எம். பாடசாலையில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடம் நிறுவப்படவுள்ளது. இதற்கான கட்டட வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கட்டுடைக் கிராமத்தில் 39 வீடுகள் அமைப்பு

சண்டிலிப்பாய் டிசெ. 10

தேர்தல் தொகுதி ரீதியாக 'கிராம எழுச்சி' (ஜன உதான) திட்டத்தின் கீழ் இவ்வருடம் நூறு வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மானிப்பாய் தொகுதியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கட்டுடைக் கிராமத்தில் 39 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன

ஏனைய வீடுகள் இத்தொகுதியில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மயிலங்காடு ஈவினை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை —

கட்டுடைக் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் 39 வீடுகளின் கட்டட வேலைகள் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் பாதிப்படைந்துள்ளதாகவும் —

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இவ்வீடுகளின் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் —

தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## யாழ்ப்பாணத்தில் கிளை

யாழ்ப்பாணம், டிசெ 10

மனித கௌரவத்துக்கான மன்றம் கிளை ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளது.

கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாக வழக்குத் தொடருதல் சிறைகளிலுள்ள கைதிகள் நிலை குறித்து அறிதல் போன்ற பணிகள் இந்தக் கிளை மூலம் மேற்கொள்ளப்படும் என்று கிளையின் இணைப்பாளர் ஐ. கிவராசா தெரிவித்தார். (இ-3)

## வீடியோ காட்சி

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறையினால் இம்மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ''எரிமலையின் செயற்பாடு'' என்னும் வீடியோ காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

புவியற்றுறை மண்டபத்தில் நடைபெறும் இந்த வீடியோ காட்சியை சகல மாணவர்களும் பார்வையிடலாம் என்று புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார்.

புவியியற்றுறையினால் பிரதி செவ்வாய்க்கிழமைகளில் கல்விசார் வீடியோ காட்சி தொடர்ந்து காண்பிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

## தவறிவிட்டது

9 - 12 - 99 நேற்றைய தினம் யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் வெள்ளை நிற கல்பனா சில்க் என்ற பெயருள்ள எனது பை ஆவணங்களுடன் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ் பேருந்து நிலையத்தின் முன்பாக உள்ள சர்வதேச தொலைத்தொடர்பு நிலையத்தில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும்,

திருமதி ச. சிவராசன்
தம்பசெட்டி வீதி.
பருத்தித்துறை.
(71688)

# மரண அறிவித்தல்கள்

தொழில்நுட்பமாமணி

## சிவசம்பு முத்துக்குமாரு

நீர்வேலி வடக்கைச் சேர்ந்தவரும் காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்க ஆரம்பகால உறுப்பினருமான சிவசம்பு முத்துக்குமாரு (தொழில்நுட்பமாமணி) அவர்கள் 9-12-99 இல் காலமானார்.

அன்னார் தையல்நாயகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசம்பு தம்பதிகளின் புத்திரனும் சரோஜினிதேவி, சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம் (இ. போ. ச. முன்னாள் ஊழியர்) அவர்களின் அன்பு மாமனும் மேனகா, சதீஸ்குமார், மீரா, தீபா, நிவேந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-12-99) வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சிவியாக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மு. சிவகுமார்
நீர்வேலி வடக்கு. (71686)

## திருமதி மக்டலின் எலிசபேத் குருபாதம்

யாழ்ப்பாணம், றக்கா லேனை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மக்டலின் எலிசபேத் குருபாதம் அவர்கள் நேற்று (09-12-99) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S S. குருபாதம் (விலை மதிப்பீட்டுத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியாரும் திருமதி சறோஜினி சத்தியானந்தன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), திருமதி விஜயலட்சுமி பெரரா UK), சுதன் குருபாதம் (U.S A.), வினோ குருபாதம் (கொமேஷல் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பிரத்தினம் சத்தியானந்தன் (உடுவில்), Dr பெரரா (U K), சுகந்தி குருபாதம் (U.S.A), செறீன குருபாதம் (முன்னைநாள் லிகிதர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுமித்திரை, தமயந்தி, கிடியன், மார்க், மைக்கல், அன்றூ, சாமுவேல் ஆதர், வான்மதி, துஷ்யந்தி, சங்கீத் ஆகியோரின் அன்புத் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11-12-99) சனிக்கிழமை காலை 10 மணிக்கு இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் கொட்டடி மெதடிஸ்த சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வினோ குருபாதம்
(மகன்)

45, றக்கா லேன்,
சுண்டிக்குளி (17690)


உங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான
பாடசாலை உபகரணங்களை
ஒரே இடத்தில் மலிவாகவும் மொத்தமாகவும்
பெற்றுக் கொள்ள

# அற்புதா டிரேடிங் கொம்பனி

[ யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையம் முன்பாக ]

பாடசாலை உபகரணங்கள்
கொப்பிகள்
காகிதாதிகள்
மை வகைகள்

அனைத்தும் மலிவு விலையில்!

ATPUTHA TRADING COMPANY

198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி.- 2505, 2057

(சி/10168)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பனை, தென்னைவள கூ. சங்கங்களில்
# விரைவில் வங்கிச் சேவை அறிமுகம்

அரியாலை, டிசெ, 10

எதிர்வரும் புத்தாண்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் வங்கிச் சேவை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முன்னேற்பாடுகளை யாழ் மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இந்த வங்கிச் சேவையை ஆரம்பிக்கும் பொருட்டு வங்கிச்சேவைப் பிரிவில் கடமையாற்றும் பணியாளர்களுக்கான முதற்கட்ட அறிமுக பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாச அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

எதிர்வரும் 13 ஆம் திகதி தொடக்கம் இரண்டு வாரங்களுக்கு இந்தத் தொடர் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுளது.

மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளில் இந்தப் பயிற்சி வகுப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-17)

## மடுப் பாதை ஊடாக வினாத்தாள், மருந்து
### நேற்று எடுத்துச் செல்லப்பட்டன

வவுனியா, டிசெ. 10

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு ஒரு தொகுதி மருந்து வகைகளும், ஜி. சீ. ஈ (சாதாரண தர) பரீட்சை வினாத்தாள்களும் மடுப் பாதையூடாக நேற்று எடுத்துச் செல்லப்பட்டன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் பெரியதம்பனை, மடுப்பாதை ஊடாக இவை எடுத்துச்செல்லப்பட்டன என்றும்—

கடந்த 40 தினங்களாக வவுனியாவில் தேங்கிக்கிடந்த 350 தபால் பொதிகளும், நான்காம் கந்தாயத்துக்கான மருந்து வகைகளும் எடுத்துச் செல்லப்பட்டன என்றும் — தெரிவிக்கப்பட்டது

அங்கு தேங்கிக் கிடக்கும் தபால் பொதிகள் இன்றுவவுனியாவுக்கு எடுத்துவரப்படவிருக்கின்றன.

அதேநேரம் — இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையில் தரை வழிப்பாதை ஒன்றைத் திறப்பது தொடர்பாக இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் கூறப்பட்டது. (இ-3-21-164)

## சக சிப்பாயை வெட்டினாராம்: மற்றொரு சிப்பாய் நீதிமன்றில்

வலி வடக்கு, டிசெ. 10

பலாலி இராணுவத் தலைமையகத்தில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற கத்திவெட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக சிப்பாய் ஒருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்

அங்கு பணிபுரிந்து வந்த இரு சிப்பாய்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திவெட்டில் முடிந்ததாகவும்—

கத்திவெட்டுக்கு உள்ளாகிக் காயமடைந்த சிப்பாயான கே. ஆர் ரஞ்சித் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும்— பொலீஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இராணுவப் பொலீஸாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சிப்பாயான நியூட்டன் விஜயசிங்கவை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இராணுவப் பொலீஸ் பாதுகாப்பில் வைக்கும்படியும்.

அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும் படியும்— பதில் நீதிவான் எம். சபாநாதன் உத்தரவிட்டார். (இ-3-86)


## தேவை

'ஓட்டோ' (Three Wheeler) ஓட்டுநர்

தொலைபேசிப் பணியாளர் [பெண்]

மேற்படி இரு பதவிகளுக்கும் முன் அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை.

★ தங்குமிட, உணவு வசதிகள் வழங்கப்படும்.

குறிப்பு;- எமது நிலையத்தில் பாடசாலை மாணவர்களுக்கான உறை போடப்பட்ட பயிற்சிப் புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு.

'ரவீன்ஸ் ரெலிகொம்'

சிங்கத்தின் வீடு,

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(சி/10157)



## யாழ்ப்பாணத்திலிருந்து

யாழ்ப்பாண உற்பத்திப் பொருள்களையும் ஏனைய பொருள்களையும்

கொழும்பிற்கு 'குமண' கப்பலில்

## அனுப்புவோரது கவனத்திற்கு

குமண கப்பலில் பொருள்களை ஏற்றுவதற்கு விண்ணப்பித்து அனுமதி பெற்றவர்கள் 07—12—99 (செவ்வாய்க்கிழமை) பி. ப. 2.00 மணிக்கு செயலக புனர்வாழ்வுப் பகுதியில் திட்டப் பணிப்பாளருடன் கலந்துரையாடியதற்கு இணங்க சனிக்கிழமை (11—12—99 தொடக்கம் பொருள்களைப் பருத்தித்துறை துறைமுகத்தில் ஏற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளவும்:

— யாழ். அரச அதிபர்

அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/10165)


### லொக்கர்பி விமானக் குண்டுவெடிப்பு:
## இரு லிபியர்கள் மீதும் நீதி மன்ற விசாரணை

லொக்கர்பி விமானக் குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்ட இருலிபியர்களுக்கும் எதிரான மூன்று குற்றச்சாட்டுக்கள் மீதும் விசாரணை நடத்தப்படும் என்று ஸ்கொட்லாந்து நீதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பாக விசாரணை நடத்திய நீதிபதி லிபியாவின் வேண்டுகோளின் படி நெதர்லாந்தில் அமைக்கப்பட்ட ஸ்கொட் நீதிமன்றுக்கு வந்த முன்னைய சட்ட வழக்குகளின் அடிப்படையில் இந்த இருவரையும் விசாரணை செய்வதற்கு நீதிமன்றுக்கு அதிகாரம் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத் தரணிகள் அவர்கள் இருவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் கொலை, சதித்திட்டம் ஆகியவற்றில் இருந்து அவர்களை விடுவிக்குமாறு நீதிபதியிடம் கோரி இருந்தனர். இதற்கு மறுப்புத் தெரிவித்த நீதிபதி அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முதல் மூன்று குற்றச்சாட்டுக்கள் மீதும் விசாரணை நடைபெறும் என்று அறிவித்தார்.

1988 ஆம் ஆண்டு அமெரிக்க பயணிகள் விமானம் ஒன்று ஸ்கொட்லாந்தின் லொக்கர்பி என்ற கிராமத்தின் மேல் பறந்துகொண்டிருந்தபோது குண்டு வெடிப்பால் சிதறியது. இதனால் விமானத்தில் பயணம் செய்த 270 பேர் உயிரிழந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு லிபிய உளவுத் துறையைச் சேர்ந்த இருவர் மீது அமெரிக்கா குற்றம் சுமத்தியது. விசாரணைகளுக்காக அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா கோரி வந்தது. அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்த லிபியா வேறு ஒரு நாட்டில் விசாரணைகள் நடைபெற்றால் அவர்களை ஒப்படைக்கத் தயார் என்று தெரிவித்தது-

இதனை அடுத்து நெதர்லாந்தில் அமைக்கப்பட்ட ஸ்கொட்லாந்து நீதிமன்றில் இது தொடர்பான விசாரணைகள் நடைபெறுகின்றன. (ஐ-6-9)

### வடக்கு—கிழக்கு மாகாண சபை:
## தேர்தல் நடத்தாமைக்கான காரணம் தெரிவிக்க உத்தரவு

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தாமைக்கான காரணங்களைத் தெரிவிக்குமாறு தேர்தல் ஆணையாளருக்கு மேல்நீதிமன்றம் நேற்று உத்தரவுபிறப்பித்துள்ளது.

வவுனியா பிரஜைகள் குழுவின் சார்பில் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுமீதான விசாரணை நேற்று நடந்த சமயமே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மனுவைத் தாக்கல் செய்திருந்தவர் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன தமது வாதங்களை முன்வைத்தார்.

'வடக்கு—கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு அதற்கான தேர்தல் நடத்தப்படாததால் அந்த மாகாண சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படவேண்டிய உரிமைகளை வடக்கு-கிழக்கு மக்கள் இழந்து விட்டனர்' என்று அவர் தமது வாதத்தில் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து அந்த மாகாண சபைக்கான தேர்தலை நடத்தாமைக்கான காரணங்களை நீதிமன்றில் ஆஜராகித் தெரிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் உட்பட மூன்று அதிகாரிகளுக்கு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. (இ-3-4)

## சமய சந்நிதிகளில்

சரசாலை நுணாவில் பதி சிதம்பர விநாயகர் ஆலய ஸ்ரீ சிவகாமியம்மை சமேத நடராஜப்பெருமானுக்கு கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6.50 மணி முதல் 7.30 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. (க)

★ ★ ★

தெல்லிப்பழை சித்தியம்பதி அருள்மிகு அண்ணமார் தேவஸ்தானத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6. 41 மணிக்கு நூதன மூர்த்திகள் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு தெல்லிப்பழை வண்ணாமாதனர குளந்தடி ஞானவைரவர் பெருமான் கோயிலில் இருந்து அண்ணமார் பெருமானின் வீதி உலா இடம்பெறும். (ஐ-8)

★ ★ ★

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

18 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 20 ஆம் திகதி கைலாயவாகனமும் 21 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 22 ஆம் திகதி தேர்த்திருவிழாவு9 23 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஐ-117)

## தமிழ்க்கைதி: .

[முதலாம பக்கத் தொடர்]

[முதலாம பக்கத் தொடர்]

பொலீஸ் மா அதிபர், படை அதிகாரிகள், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொல்லை தவிர்ப்புக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

களுத்துறை, கண்டி, நீர்கொழும்பு ஆகிய சிறைகளில் உள்ள சுமார் 500 கைதிகள் தொடர்பான விசாரணைகளை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கவேண்டும் என்றும் —

பெப்ரவரி மாத முடிவுக்குள் குற்றமற்றவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் —

குற்றம் இழைத்தவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்றும் — மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களில் கைது செய்யப்படுபவர்கள் 24 மணி நேரத்துக்குள் விடுதலை செய்யப்படவேண்டும் என்றும்—

பொலீஸ் பதிவு கோரத் தேவையில்லை என்றும் — முடிவுகள் எடுக்கப்பட்டன. (இ-3)


## புலமைப்பரிசில்-2000

6 ஆவது பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

ச. பிரணவன் - 171
யா. ஆ. மெ. மி

ஞா. பவித்ரா - 165
யா. இ. ம. ஆ. பா.

ம. விதுஷாயினி - 155
யா. பு. ஜோண்பொஸ்கோ

அடுத்த பரீட்சை:
12-12-99 ஞாயிறு

புதிய நாவலர்
கல்வி நிலையம்

ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.

(71691)


## கொடியேற்றம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமான் தேவஸ்தானத்தில் வைகுண்ட ஏதாதசி மஹோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதி சுவர்க்கவாயில் தரிசனமும், இரதோற்சவமும் நடைபெறும் மறுநாள் திருவடி நிலையில் தீர்த்த உற்சவம் இடம் பெறும். (க-28)

## ஜி.சீ.ஈ...

(முதலாம் பக்கத் தொடர்)

அவற்றைப் போட்டோப் பிரதியாக சகல பரீட்சார்த்திகளிடமும் விநியோகித்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை ஊர்ஜிதம் செய்த கல்முனை வலயக் கல்விப்பணிப்பாளர் எம். இஸத்தீன் பிரஸ்தாப பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும்—

தற்சமயம் சகல பரீட்சை நிலையங்களுக்கும் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும்— தெரிவித்தார். (இ-3-21)

## ஈ. பி. ஆர். எல். எவ்...

(முதலாம் பக்கத் தொடர்)

கையை ஏற்க மறுத்தனர் என்றும்—

இதன் காரணமாக இரு தரப்புக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது என்றும்— அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடையவே அலுவலகத்தில் இருந்து வெளியேறுமாறு பெருமாள் கோரப்பட்டார் என்றும்—

அவர் மறுக்கவே இராணுவ உதவி கோரப்பட்டது என்றும்— அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-3-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி[illegible] 10-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org